ஶாகாஜ்ஜுஸ்திஶு..... வதமொவாநிம்பாஜ்ஜுனா ஸமோக்கஸு ॥உஎ॥

யானே ஶயனே வொதே வெ ாக்தா வ்ருக்ஷா: வராணெவது ।

---

பித்தியுமுடையதாகவும், பாதங்களுடன் கூடியதாகவும், சிகரத்துடன் கூடியதாகவுமிருந்தால், அதற்கு "சேகரீ" என்று பெயர். 25

முண்டாகாரமாக (மொட்டையாக - சிகரமில்லாமல்) இருப்பது "முண்டீ" என்று பெயருடையதாகும். அது, சிகரத்தைப்போன்ற பித்தியையுடையதாகும். விஸ்தாரத்திற்கு ஸமமான, உயரமுடையதாகும். மண்டபத்துடன் கூடியதாகவோ, மண்டபமில்லாததாகவோ இருப்பதாகும். அதில், பத்மாதிகளின் மானத்தை நன்கு உபயோகிக்க வேண்டும். 26½

யானத்திலும் (வாகனத்திலும்) சயனத்திலும் (படுக்கையிலும்,) சார்காலம், திமிசம், (தும்பை என்னும் மரம்) ........ பலா, வேம்பு, மருது, இலுப்பை ஆகிய மரங்களை உபயோகிக்கவேண்டுமென்று முன் காலத்தியவர்கள் கூறியுள்ளார்கள்.

---

* ஶிவாரோஹமேவ ஸித்திமியுக்தா । இதி வாடெ யுக்த இதி ஸாதி ।

† சுவமண்டபாயவா ஸிதா । இதி வாடெ யுக்த இதி ஸாதி ।

$ வடீடீகம் தத்ர ஸாதம், இதி வாடெ யுக்த இதி ஸாதி ।

[ ஸ்ரீமத்பகவத்ஸேநாபதி ஹேது யாஜ்ஞம் ஸ்ரீமத்ஸ்வாமி ஸம்ப்ரதிஷ்டிதம் |
தத்ராதம் தத்ஸவி ஶிபிகாலக்ஷணயுக்தம் ஸம்ஸதம் ஸமாப்தம் ||

இதி ஶிபிகாத்⁴யாய: ]

த்³விசக்ரபா³ஹ்யே விஸ்தாரம் ஷட்ஸப்தாஷ்டவிதஸ்தய: || ௨௯ ||

சக்ரநாபி⁴த்³வயம் நாபி⁴ச்சா²யா மோக்ஷாந்தரஸ்து தத் |
ஹாரபா³ஹ்யம் ச தாவத் ஸ்யாத் விஸ்தாராத³ர்த⁴காயதம் ||

சதுஸ்த்ரித்³வ்யங்கு³லோத்ஸேத⁴ம் பா³ஹல்யம் பஞ்சமாத்ரகம் |
த்ரிஸப்தநவயா தத்ர வ்யாஸோத்ஸேதா⁴ஶ்ச பூர்வவத் || ௩௧ ||

---

... ... ... ...

... ... ... ...

[சிபிகாத்தியாய விதி முற்றும்-]

இரண்டு சக்கரங்களின் வெளியிலுள்ள (டீர்கையின்) விஸ்தாரமானது, ஆறு 6, ஏழு 7, அல்லது எட்டு 8 விதஸ்தி (12 அங்குலம்) இருக்கவேண்டும். 29

நாபிச்சாயை, நாபிமோக்ஷம், இவைகளின் மத்தியமானது, நாபிதுவாரம் (சக்கரங்களின் துவாரம்) ஆகும்.

ஹார (ஆர)த்தின் வெளிக்கையானது, அவ்வளவு இருக்கவேண்டும். ? விஸ்தாரத்தைக்காட்டிலும் அரைப்பங்கு அதிகமான நீளமுடையதாக இருக்கவேண்டும். 30

பாரகமானது (பாரானது) நான்கு 4 மூன்று 3 அல்லது இரண்டு 2 அங்குலம் உயரமுடையதாகவும், ஐந்து 5 அங்குலம் பாஹல்யம் (அகலம்) உடையதாகவுமிருக்க வேண்டும்.

அதில் அகல நீளங்கள், முன்பு கூறப்பட்டிருப்பதைப் போல, மூன்று 3, ஏழு 7, ஒன்பது 9 விதமாகும். 31

கூபராக்ஷோன்னதம் தீர்கம் குல்யாவச்ச த்ருடீக்ருதம் |
மத்யஸ்தானோபரி துலாமத்யநிர்கமாக்ரத: || ௩௨ ||

லலாடம் து த்ரிஹஸ்தாதி ததக்ரம் குடிலாக்ருதி |
பஞ்சபாரம் இதி ப்ரோக்தம் கூபரோ யதாக்ரமாத் ||

பாகோபர்யேகமாத்ரகனம் பலகாப்ரஸ்தரோ பவேத் |
அக்ஷமக்ஷோத்தரம் சக்ரபட்டம் பாரோபநாயகம் || ௩௪ ||

உத்ஸேதம் பஞ்சஷட்ஸப்தபாகம் விந்யஸேத் |

---

அது, (ஏர்க்காலானது குறுக்கே,) வாய்க்காலைப்போல் நீண்டு, திருடீகிருதமாக (உறுதியாக இருக்கும்படி இசைக்கப்பட்டு) இருக்கவேண்டும்.

பாரின் மத்தியத்திற்கு மேலே, துலாமத்தியத்தின் நிர்கமனத்தின் அக்கிரமிருக்கவேண்டும். (துலாக்கட்டையின் நடுவில் தவ்வருத்து, அதில், பாரின்மத்தியமானது, நன்கு ஸமமாக இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.)

லலாடமானது (மூக்கணையானது) மூன்று 3 முழம் முதலான அளவுடையதாக இருக்கவேண்டும். அதன் நுணியானது வளைந்தவடிவமுடையதாக இருக்கவேண்டும்.

பஞ்சபாரமானது (ரதத்தின் ஐந்து பாகமானது) இவ்விதமாகக்கூறப்பட்டிருக்கிறது.

கூபரமானது, நான்கு பங்குகளுடையதாகும். (ஒரு) பாகத்தின் மேலே, ஒரு 1 அங்குலம், கனமுடையதான பலகாபிரஸ்தரம் (பலகையின் பரப்பு) இருக்கவேண்டும்.

அக்ஷம், அக்ஷோத்தரம், சக்கிரபட்டம், பாரோபநாயனம், இவைகளின் உத்ஸேதமானது, (உயரமானது) ஐந்து 5, ஆறு 6, அல்லது ஏழு 7 (அங்குலமு)ம்,

அஷ்டாதசாங்குலம் தைர்க்யம் பார்ச்வே ஹாரோபயாதகம் ||

போதிகாகாரஸம்யுக்தை: பட்டை: த்ருடீக்ருதம் |
அக்ஷோர்த்வே சாக்ஷோத்தரபாஹல்யத்வாரம் மத்யரந்த்ரஸமன்விதம் || ௩௬ ||

ததஸ்த்வக்ஷரக்ஷார்த்தம் பார்ச்வயோ: பந்தனம் பவேத் |
உபதானம் யதி ந்யஸ்தம் தத் தத்ஸம்வ்யாஸார்த்த நீவ்ரகம் || ௩௭ ||

அக்ஷாவதி தைர்க்யம் ஸ்யாத் தாரவம் சதுரச்ரகம் |

---

பாஹுல்யமானது (கனமானது) இரண்டு 2, அல்லது மூன்று 3 அங்குலமுமிருப்பதாகும்.

அதனுடைய பக்கத்திலுள்ள பாகோ(ரோ)பதானமானது, பதினெட்டு 18 அங்குலம் நீளமுள்ளதாக இருக்க வேண்டும்.

போதிகை (பொதிகை) யின் உருவத்தைப் போன்ற உருவமுடைய இரும்புப்பட்டங்களினுல் உறுதியாகச் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

அக்ஷோர்துவம் அக்ஷோத்தரங்களின் பாஹுல்ய ஸமமான துவாரத்துடன் கூடிய அதன் மத்தியத்தையுடையதாக இருக்கவேண்டும். (மத்திய துவாரமானது, அக்ஷத்தின்மேலேயுள்ள துவாரத்தின் விஸ்தாரத்திற்கு ஸமமாக இருக்கவேண்டும்.) 36

அதற்குக்கீழே, அக்ஷத்தை ரக்ஷிப்பதற்காக, இரு பக்கங்களிலும் பந்தனம் (கட்டு) இருக்கவேண்டும்.

அதில் (ரதத்தில்) உபதானத்தை (தலையணையை) கல்பிப்பதானுல், அது, அதன் உள்கூட்டுக்கு ஸமானமான விஸ்தாரமும், அதில் ஸரிபாதி ½ பங்கு நீப்பிரமுமுடையதாகவுமிருக்கவேண்டும். 37

அதன் (உபானத்தின்) அக்ஷாவதியான நீளமானது, மரமாக இருந்தால், அது, சதுரஸ்ரமாக இருக்கவேண்டும்.

அய:பட்டைஶ்ச கீலைஶ்ச ஶிகாபி: த்ருடீக்ருதம் ॥ ௩௮ ॥

ஸாயுக்தபக்ஷகரம் பாதோத்ஸேதஶ்சக்ரபாதமிஷ்யதே ।
சக்ராங்கஸமம் சக்ரம் விஸ்தாரம் ஸமீகீர்திதம் ॥ ௩௯ ॥

நாபிர்தஶாங்குலோத்ஸேதா விதஸ்த்யாயாமவிஸ்த்ருதம் (தா) ।
ஸபட்டநாபிமத்யே து த்வாத்ரிம்ஶத்வா ச்சதுர்விம்ஶகம் ॥ ௪௦ ॥

ஷோடஶகம் * த்வா வா தத்ர யுக்த்யா ஸம்கல்பிதம் ।
ஸகாரவணக்ரமாத் த்ரயம் ஸாயகோதக்ரம் ॥ ௪௧ ॥

---

அதன் அடிப்பக்கமானது, (இரும்பு) பட்டைகளினுலேயும் கீலங்களினுலேயும், (கீலம்—முளை, ஆணி) அதன் சிகைகளுடன் திருடமாகச்செய்யப்பட்டிருக்கவேண்டும். 38

கரத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்ற பாதத்தின் உயரமானது, சக்கரத்தின் ஸரிபாதியாகும், என்று கருதப்படுகிறது.

சக்கரத்தின் விஸ்தாரமானது, சக்கரத்தின் மத்தியத்திற்கு ஸமமான அளவுடையதாகும், என்று கூறப்பட்டிருக்கிறது. 39

நாபியானது, பத்து 10 அங்குலம் உயரமுள்ளதாகவும், விதஸ்தி (பன்னிரண்டு 12 அங்குலம்) அகலம் நீளம் உள்ளதாகவுமிருக்கவேண்டும். (நாபி—குடம்)

(பக்கங்களில்) பட்டங்களுடன் கூடிய நாபிமத்தியில், முப்பத்திரண்டு 32, இருபத்திநான்கு 24, அல்லது பதினறு 16 *யுக்தியுடன் கல்பிக்கப்பட்ட எண்ணிக்கையுடையதாக இருக்கவேண்டும்.

---

* த்வா வா தத்ர, உதத்ர, ஹவேதாரம், உத வாரோ யாஸ்த உத ஸாதி ।

*ஆரக்கால்களைக் கல்பிக்கவேண்டும், என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

𑌮𑍂𑌲𑍇 𑌷𑌣𑍍𑌣𑌵𑌾𑌕𑌾𑌰𑌂 𑌮𑍂𑌲𑌾𑌗𑍍𑌰𑍇 𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌰𑍋𑌹𑌾𑌰𑍋𑌹𑌵𑌶𑍇 𑌚𑍈𑌵 𑌅𑌕𑍍𑌷𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 𑌤𑌥𑌾 𑌬𑌕𑌮𑍍 ॥ ௪௨ ॥

𑌭𑌾𑌰𑌸𑍍𑌯𑍋𑌦𑌯𑌪𑌟𑍍𑌟𑍈𑌶𑍍𑌚 𑌕𑍀𑌲𑌕𑍈𑌃 𑌪𑌟𑍍𑌟𑌬𑌨𑍍𑌧𑌕𑍈𑌃 ।
𑌯𑍋𑌗𑍍𑌯𑌂 𑌚 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌪𑌾𑌦𑌾𑌂𑌶𑍈𑌰𑌾𑌯𑌸𑍈𑌃 𑌪𑌟𑍍𑌟𑍈𑌶𑍍𑌚 𑌬𑌨𑍍𑌧𑌯𑍇𑌤𑍍 ॥ ௪௩ ॥

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌚𑍋𑌪𑌪𑍀𑌠𑍇 𑌚 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌵𑌶𑌾𑌨𑍍𑌨𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑍇𑌽𑌕𑍍𑌷𑍋𑌤𑍍𑌤𑌰𑌬𑌨𑍍𑌧𑍇 𑌦𑌾𑌰𑍁𑌕𑍀𑌲𑍈𑌃 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

𑌪𑌾𑌦𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑍈𑌕𑌂 𑌭𑌾𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍂𑌲𑌿𑌕𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌮𑍍 ।
𑌅𑌗𑍍𑌰𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑌲𑍇 𑌵𑌾 𑌤𑍁 𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾 𑌪𑌟𑍍𑌟𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍇 ॥ ௪௫ ॥

---

அவைகள், அகாராக்ஷரத்தைபோன்று, அடியிலும், நுணியிலும் மூன்று 3 அல்லது மூணரை 3½ அங்குலம் இருக்கவேண்டும். மூலத்தில் ஷண்ணவமான ஆகாரமானது? அடியிலும் நுணியிலும் கூறுடனிருக்கவேண்டும்.

ரோஹாரோஹகனத்தில் (ஏறி இறங்கும் பளுவில்) அக்ஷோத்தாரத்தையும் பகத்தையும் பாரத்தின் (பாரின்) உதய (முதலாவது) பட்டங்களுடனும், முளைகளுடனும் பட்டபந்தங்களுடனும் (பட்டபந்தம்—இணைத்த பட்டம்) பொருத்தமாக இருக்கும்படி, இரண்டு 2 அம்சம், பாதாம்சமான இரும்புப்பட்டங்களினாலே இணைத்துக்கட்டவேண்டும்.

அந்த ஸ்தானத்திலும், உபபீடத்திலும், குஹ்யமாக (மறைந்திருக்கும்படி) யுக்தியுடன் இணைக்கவேண்டும்.

அக்ஷாந்தத்திலும், அக்ஷோத்தரமான பந்தத்திலும், தாருகீலங்களினாலே (மரமுளைகளை) உபயோகிக்கவேண்டும்

சூலிகோச்சிரயமானது, (சூலிகம்—கர்ணமூலம். உச்சிரயம்—உயரம்) பாதத்தின் உயரத்தில், இரண்டில் 2ல் ஒரு 1 பாகம் இருக்கவேண்டும்.

முன் பக்கத்திலும், பக்கத்திலும், தலத்தி (அடியி) லும்,

பஶ்சாத் பஞ்சாங்குலோச்ச்ரயம் முகபட்டிகயா வ்ருதம் ।
மத்யே கர்ணவாதஸ்ய முகுளாக்ரோத்தராந்திகா ॥ ௪௬ ॥

பாரோ பாரோபதானம் ச அக்ஷமக்ஷோத்தரம் ததா ।
கூபர: கூபரஸ்யாக்ரே த்வயபட்டைஶ்ச கீலகை: ॥ ௪௭ ॥

தத்ஸந்தாநேஷு தத்ஸ்தானே பந்தயேஸ்தாபயே (ச்சாதயே)தபி ।
அக்ஷாக்ஷோத்தரம் மத்யே து தாருகீலம் ப்ரயோஜயேத் ॥ ௪௮ ॥

ஸகலே ராஜ்யாதிபத்யே ச ராஜயுத்தே மஹோத்ஸவே ।
மங்கலே தேவபூஜாயாம் ஸோமயாகே ததைவ ச ॥ ௪௯ ॥

உத்ஸவம் கர்ணாவிஷ்டம் ப்ராஸாதாவரணவிஷ்யதே ।

---

களிகையானது, பட்டகாந்தரத்தில், (பட்டத்தின் நடுவில்) இருக்கவேண்டும். 45

பின்பக்கத்தில், ஐந்து 5, அங்குலம், உயரமானது, முகபட்டிகையினாலே சூழப்பட்டிருக்கவேண்டும்.

கர்ணவாதத்தின் இடையில், முகுளாக்கிரமானது, உத்தராந்தமாக இருக்கவேண்டும். 46

பாரம், பாரோபதானம், அக்ஷம், அக்ஷோத்தரம், கூபரம், இவைகளை, கூபரத்திற்கு முன்னால், இரண்டு 2 பட்டங்களினாலேயும், முளைகளினாலேயும், அந்தந்தசேர்க்கைகளுடன், அந்த ஸ்தானத்தில், பந்தனம் செய்யவேண்டும் (இணைக்கவேண்டும்.) மூடவும் வேண்டும்.

அக்ஷம், அக்ஷோத்தரம் இவைகளின் மத்தியில், தாருகீலத்தை (மரத்தினாலான முளையை) உபயோகிக்கவேண்டும்

ஸகல ராஜ்யாதிபத்தியம், ராஜாக்களின் சண்டை, மஹோத்ஸவம், மங்களகாரியம், தேவபூஜை, ஸோமயாகம்,

வாஸம்(ம்) த்வித்ரிகுணாயாமம் சக்ரம் தத்ஸம்யுதமிஷ்யதே ||௫௰||

ஸப்ததாலம் து வா தைர்க்யம் த்ரிசதுரங்குலவிஸ்த்ருதம் |
ஸ்வஸ்வபாதவசம் தத்ர வாஹனம் ஆயாமதோ த்ரிபி ||௫௧||

ஸாந்தராயஞ்சோர்த்வதோ ஸஸ்வாஷோத்தரமிஷ்யதே |
சதுஷ்ஷஷ்டிகஸம்க்யாபி: ஸ்தம்பயுக்தமிஷ்யதே ||௫௨||

ஷட் பஞ்சார்தம் பஞ்ச வா தாலேன சரணோதயம் |
ஸப்ததாலம் துலாதைர்க்யம் த்ரிசதுரங்குலவிஸ்த்ருதம் ||௫௩||

---

இது முதலிய காரியத்தில், ரதாரோஹணமானது, விரும்பத் தக்கதாக நினைக்கப்படுகிறது. 49½

வாஸமானது, இரண்டு 2, அல்லது மூன்று 3 மடங்கு நீளமிருக்கவேண்டும். சக்கிரமானது, அததனுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

நீளமானது, ஸப்ததாலமாக இருக்கவேண்டும். தன் காலின் வசமாக இருப்பதுமாகும், மூன்று 3 அல்லது நான்கு 4 அங்குலம் விஸ்தாரமுள்ளதாக இருக்கவேண்டும்.

முந்தியும், கீழேயும், திக்கிலும் ஆரத்திற்குமேலேயும், இடைவெளியுள்ளதாக இருக்கவேண்டும். குட்டையான பாதம், உத்தரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும்.

அறுபத்திநான்கு 64 எண்களினாலே, ஸ்தம்பயுக்தமாக பொருத்தமாக இருக்கவேண்டும். 52

சரணோதயமானது, (காலின் நீளமானது) ஆறு 6 ஐந்தரை 5½, அல்லது ஐந்து 5, தாலத்தினாலிருக்கவேண்டும்.

துலாத்தின் நீளமானது, ஸப்ததாலமாக இருக்கவேண்டும். அது, மூன்று 3, அல்லது, நான்கு 4, அங்குலம் விஸ்தாரமுடையதாக இருக்கவேண்டும். 53

ஸ்வஸ்வபாதவசாத்தத்ர பூர்வவதுத்தராதிகம் ।
ஏகத்வித்ரிதலோபேதமேகம் வாத சதுர்முகம் ॥ ௫௪ ॥

மண்டபாகாரஸம்யுக்தம் சாலாகாரசிர:க்ரியம் ।
த்ரிசதுஷ்பஞ்சஷட்ஸப்தஹஸ்தம் சக்ராந்தமிஷ்யதே ॥ ௫௫ ॥

சக்ரோத்ஸேதம் சதுஷ்பஞ்சஷட்க.....வேததீவ்ரகம் ।
அக்ஷமக்ஷோத்தரம் சைவ வாரோ வா யானகம் ததா ॥ ௫௬ ॥

அஷ்டாஷ்டவிஸ்தாரோத்துங்கை: தாருகீலைர்த்ருடீக்ருதம் ।

---

அதில், (நீளமானது) தன் காலின் வசமாக இருப்பது மாகும். உத்தரம் முதலியது, முன்பு கூறப்பட்டிருப்பதை போலவே இருப்பதாகும்.

ஏகதலம், துவிதலம், அல்லது திரிதலத்துடன் கூடிய தாக இருக்கவேண்டும். அல்லது ஏகதலமாகவும் சதுர் 4 முகமாகவும் இருக்கவேண்டும். 54

மண்டபத்தைப்போன்ற வடிவத்தையுடையதாகவும், சாலையைப்போன்ற சிரத்தின் காரியத்தை யுடையதாகவு மிருக்கவேண்டும்.

சக்கராந்தமானது, (அந்தம்—கோடி, நடு) மூன்று 3, நான்கு 4, ஐந்து 5, ஆறு 6, அல்லது ஏழு 7 ஹஸ்தமுள்ள தாக இருக்கவேண்டும். என்று கருதப்படுகிறது. 55

சக்கரத்தின் உயரமானது, நான்கு 4, ஐந்து 5, ஆறு 6

... ... ... ... தீவிரம் உடையதாக இருக்க வேண்டும்.

அக்ஷம், அக்ஷோத்தரம், வாரம், யானகம், (அல்லது, வாரோபயானகம்) இவைகள், எட்டுக்கு எட்டு 8×8, விஸ்தாரமும் உயரமுமுடைய தாருகீலங்களினாலே திடமாகச் செய்யப்பட்டிருக்கவேண்டும். 66

[illegible] ॥ ௫௫ ॥

[illegible]
[illegible]
[illegible] ॥ ௫௬ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௫௭ ॥

[illegible]
[illegible] ॥

---

ஒன்று 1, இரண்டு 2, மூன்று 3, தலமுள்ளதானால், மாளிகையைப்போல் அலங்காரம் செய்யப்பட்டிருக்க வேண்டும். 57

பதினாறு 16, கால்களுடையதாகவும், திக்கு தோறும் முகபத்திரமுடையதாகவும், ஸகல அலங்காரங்களுடன் கூடியதாகவும், திடமாகவும் (உறுதியாகவும்), இருக்கும் படி, ரங்கத்தை இணைக்கவேண்டும்.

ஸமர்த்தனாக இருப்பவன் சில்பியை அழைத்து வந்து அவ்விதமாகவே இணைக்கவேண்டும். 85

பாதுகம், இரண்டு 2 அம்சஅளவுள்ளதான பத்மம், லேகிதங்கள், இரண்டு 2 அம்சமுள்ள மூர்திகம், பஞ்ச 5 போதி, ரஸ 6 குட்மலம் (மொட்டு) இவைகளை, திர்யகாதியாக (குறுக்காக) செய்யப்பட்ட பட்டிகைகளினால் கல்பிக்க வேண்டும். 59

... ... திரிபாதம் (முக்கால் ¾) கரம், (இரண்டு ½ அல்லது முழம்) நந்த (ஒன்பது 9) இவைகளின் வர்கங்

பத்மம் து பட்டீ ஸஹ கர்ணப்ரஸ்தரம்
வ்யாளம் து நக்ரக்ரமமேவ ஶோபிதம் ।
கர்ணாம்ஶபத்மம் ஜகதீ ப்ரதிஷ்டாம்
நரா ப்ரவேஶம் குமுதம் து பாகம் ॥ ௬௰ ॥

வஸ்வம்ஶகர்ணம் த்ர்யம்ஶபட்டி
ஶிவாம்ஶவேதீ ஸகலம் தராதலம் ।
ஶரண்யபத்மம் அத கர்ணவேதிகா
வர்ணேந வேதீ களபக்ஷைகாம்ஶம் ॥ ௬௧ ॥

ப்ரஸ்தராம்ஶமுனிதேவஸ்தானகம்
நாட்யதாலோபதானகல்பிதம் ॥ ௬௨ ॥

இதி மயமதே வாஸ்துஶாஸ்த்ரே யாநாதிகாரோ நாம
ஏகத்ரிம்ஶோऽத்யாய: ॥

---

களினுலே, இரண்டு 2 பாகமுடையதாகும் என்று, கணக்கானது விரும்பப்படுகிறது ?

பத்மம், பட்டீ, கர்ணத்துடன் பிரஸ்தரம், வியாளம், நக்கிர கிரமம், (நக்கிரம்-முதலே, இவைகளினுல்) சோபிதமாக இருக்கவேண்டும்.

கர்ணும்சபத்மம், ஜகதீ, பிரதிஷ்டை ? நராப்பிரவேசமான குமுதம் ஒருபாகம், 60

எட்டு 8 அம்சமுள்ள கர்ணம், மூன்று 3, அம்சமுள்ள பட்டீ, ஒரு 1 அம்சமுள்ள வேதீ, ஸகலமான (ஒரு 1 அம்சம்) தராதலம், சரணியபத்மம், (கார்க்கக்கூடிய, அல்லது ஐந்து 5) பத்மம், கர்ணத்துடன் கூடிய வேதிகை, வர்ணத்திஞல் வேதீ, களபக்ஷம் (கழுத்து) ஒரு 1 அம்சம். 61

பிரஸ்தராம்ச முனிதேவஸானகம் நாட்டியதால உபதானத்திஞலே கல்பிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். ?

மயமதம் வாஸ்து சாஸ்திரத்தில்
யானாதிகாரமென்னும் முப்பத்தொன்ருவது
அத்தியாயம் முற்றும்.

—o—

அத த்வாத்ரிம்ஶோத்யாய: ||

த்ரிவிதஸ்திக்ருதவ்யாஸம் பஞ்சவிதஸ்த்யாயதம் ச ஶயனம் ஸ்யாத் |
விஸ்தாராயாமாப்யாம் த்ரிபஞ்சமாத்ராதிகம் ஜ்யேஷ்டம் || க ||

அதவா சதுஷ்பஞ்சமாத்ரைர்வ்யாஸ இஷ்டிகாயா: |
வ்யாஸார்த்தம் பாஹல்யம் வ்யாஸத்ர்யம்ஶேன மத்யபட்டம் ஸ்யாத் ||

வ்யாஸத்ரி அம்ஶசதுர்பாகம் பாஹல்யம் சேஷ்டிகாயாஸ்து |
ப்ருஷ்டபட்டாதிகபோ(ஸ்வதிகம்) நிர்கமம் வ்யாஸ ஸமம்
கதிதம் வா || உ ||

# முப்பத்திரண்டாவது அத்தியாயம்

சயனமானது (படுக்கையானது) மூன்று 3 விதஸ்தியினாலே செய்யப்பட்ட அகலத்தையுடையதாகவும், ஐந்து 5, விதஸ்தி (விதஸ்தி—பன்னிரண்டு 12 அங்குலம்) நீளமுடையதாகவுமிருக்கவேண்டும்.

கீழே கூறப்பட்டிருக்கின்ற அகலம், நீளத்துடன், மூன்று 3, அங்குலம் அகலமும், ஐந்து 5 அங்குலம் நீளமும் அதிகமாக இருப்பது, உத்தமமாகும். 1

இஷிகைக்கு, நான்கு 4 அல்லது, ஐந்து 5, அங்குலம் வியாஸமானது (விஸ்தாரமானது, அதிகமாக) கூறப்பட்டிருக்கிறது.

அதன் மத்திபட்டமானது, அகலத்தில் பாதி அல்லது அகலத்தில் மூன்றில் ஒரு 1 பாகம் பஹளம் (அகலம்) உள்ளதாக இருக்கவேண்டும். 2

இஷிகையின் பஹளமானது, அதன் அகலத்தில் மூன்றில் ஒரு 1 பாகம், அல்லது, நாலில் 4ல் ஒரு 1 பாகம் (அதிகமாக) இருக்கவேண்டும்.

பிருஷ்டபட்டத்தில், நிர்கமனமானது, (கூடுதலானது)

[illegible] ।
[illegible] ॥

† [illegible] ।
[illegible] ॥

[illegible] ।

---

விஸ்தாரத்தினளவு அதிகமாக இருக்கவேண்டும். அதன் கர்ணத்திலிருப்பதுமாகும். 3

பக்கத்தில், அதிகமான, நுனி, அடி, இவைகளில் மத்தியசிகையானது, பலமாக இருக்கும்படி கல்பிக்கப்பட வேண்டும்.

நிர்கமனமானது, இவ்விதமிருக்கவேண்டும். பாதத்தைக் காட்டிலும் அதிகமாக இருப்பதை, பலமாக இருக்கும்படி கல்பிக்கவேண்டும். 4

*சேஷகபாதகமனமானது, ஒண்ணரை 1½ விதஸ்தி, ஒரு 1 விதஸ்தி அல்லது, அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

அதன் விஷ்கம்பமானது, (விஷ்கம்பம்—அகலநீளம்) அதன் உயரத்தில் நான்கி4ல் ஒரு பாகம், அல்லது மூன்றில் 3ல் ஒரு 1 பாகமிருக்கவேண்டும். கால்¼ பங்காகவே இருப்பதுமாகும். 5

நேர்ப்பார்தமான வியாக்ர (புலி) பாதம் மிருக (மான்) பாதம் இவைகள், சயனத்தின் பாதத்திற்கு அனுகூலமான வைகளாகும்.

---

† [illegible] ।

* சயன பாதத்தில் மேலே நீண்டிருக்கும் பாகமானது, என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

ஶ்ரேஷ்டயிகவிஷஶிவா ஷ்வநாஶஷதரஶவ்ரகாரா: ஷ்ரு|| ௬ ||

ஸமகா பர்யங்கோ வா பட்டிகிர்நாவி வாசயிகா காயர்ா ।
ஶயநவிஶாலவ்யாஸா (ஸம்) தீர்ஷம் சைவ பாதபட்டிகோ
வேதா(தம்) || ௭ ||

தோரணோச்சேரவசிதா வர்ணக(ம்) கீலார்த்தஸமாயுத-
பகதர்ணா ।
பர்யங்கஶிபிகா(கா)யர்ா விரஜீவ்ராஹ்மணாதிஷு ||

பூர்வஶிர: பர்யங்கம் தக்ஷிணேऽனுவம்ஶஸவி ।
தக்ஷிணத: ஶிரஸம் வா பஸ்சிமேऽனுவம்ஶதிக் ச ஷ்ரேஷ்டே ||௯||

---

அது, குட்டையாக இருந்தால், அதன் சிகையானது (குடுமியானது) அதிகமாக இருக்கவேண்டும். அவைகள், தனது பெயருக்கேற்ற அமைப்புள்ளவைகளாகும். 6

பலகையோ கட்டிலோ, பட்டத்தினாலே அலங்கரிக்கப் பட்டோ, அதிகமாக அலங்கரிக்கப்பட்டோ இருக்க வேண்டும்.

சயனத்தின் உயரமானது, அதன் விசாலத்திற்கு ஸமமான விஸ்தாரமுடையதாகவும், பாத பட்டிகையுடன் கூடியதாகவுமிருக்கவேண்டும். 7

வட்டமான கீலார்த்தத்துடன் கூடிய பகதுண்ட மானது, தோரணத்தின் உச்சியை ஒத்ததாக இருக்க வேண்டும்.

"விரஜீ" என்னும் இந்த பர்யங்கசிபிகையானது பிராம்ஹணாதிகளுக்குச் சிறந்ததாகும். 8

பர்யங்கமானது (கட்டிலானது) கிழக்கு திக்கில் சிரமுடையதாகும். அதன் வலது பக்கத்தில் அனுவம்ச

வ்யாக்ரம்ருகபாதஸம்யுக்தம் விப்ரக்ஷத்ரியயோ: ஶேஷயோஸ்த
தத்ரூபபாதமிஷ்டம் ।
நவஸப்தபஞ்சவிம்ஶத்யங்குலவிஸ்தாரா:(ஸ)ஸமோத்ஸேதம் ॥ ௮ ॥

உத்தமமத்யமாதமாஸநம் ஸமபாதம் ஶயநவத் கல்பயேத் ।
ஸமசதுரஶ்ரம் பீடம் (வ்யா, ஆயா)ஸம் நளிநம் ஆயதம் ப்ரோக்தம் ॥

அஷ்டாம்ஶாதிகமேகம் வா த்வ்யம்ஶம் வா ஆயதமேவ விஶாலம் து ।
விஸ்தாரஸஹிதம் த்விபாகம் வா ஆயதம் விப்ரக்ஷத்ரியயோ: ॥

---

மிருக்கவேண்டும். தெற்கில் சிரஸ்ஸுடையதாக இருப்பது மாகும்.

மேற்கு முகமாகவும் மற்ற (வடக்கு) திக்குமுகமாகவும் இருப்பது விரும்பத்தக்கதல்ல. 9

புலிக்கால், மான்காலுடன் கூடிய சயனமானது, பிராம்ஹண க்ஷத்திரியர்களுக்குக் கூறப்பட்டதாகும், மற்ற வைசியசூத்திரர்களுக்கு அவை நீங்கலான பாதமுடையது ஆகும்.

இருபத்தொன்பது 29, இருபத்தேழு 27, இருபத்தைந்து 25, அங்குலம் விஸ்தாரமும், அதற்கு ஸமமான உயரமுள்ளது முறையே, உத்தமம், மத்திமம், அதமம், என்னும் ஆஸனங்களாகும். அது ஸமபாதமாக இருக்கவேண்டும். அதை சயனத்தைப்போல் கல்பிக்கவேண்டும்.

ஸமசதுரஶ்ரமான ஆஸனமானது, "பீடம்" எனப்படும் நீளமாக (நீண்டசதுரஶ்ரமான) ஆஸனம் என்று கூறப்படும்.

(ஆஸனத்தின்) விசாலமானது, எட்டு 8ல் ஒரு 1 பாகம் அதிகமான நீளமும், இரண்டு 2 பங்கு ஆயதமும் (நீளமும்) உடையதாக இருக்கவேண்டும். (ஆஸனத்தின் நீளமானது அதன் விசாலத்தைக்காட்டிலும் எட்டி 8ல் ஒரு 1 பங்கு கூடுதலாகவோ, இரண்டு 2, பங்கு நீளமாகவோ இருக்க வேண்டும், என்பது பொருள்.)

ஸிம்ஹேபபூதவ்ருஷபைர்யுக்தமேவம் த்ருணாமாஹியாதம் ஸ்ம்ருதம் |
ஸிம்ஹேபயுக்தமேவம் த்விஜக்ஷத்ரியாணாம் ததாக்யம் ||

உத்தரம் சாப்ஜகபோதம் லிங்காந்தரிதாஹ்வயம் |
நானாசித்ரவிசித்ரம் தேவானாம் ச ப்ரகீர்த்திதம் ||

பத்மபந்தசமாயுக்தம் ஸ்தம்ப ஸிம்ஹாத்புதம் ஸ்ம்ருதம் |
ததூர்த்வே தோரணோபேதம் விஜிகைஸ்ச ஸமந்விதம் || கரு ||

ஸிம்ஹாஸனமிதி ப்ரோக்தம் முனிபிஸ்ச புராதனை: |

ஸிம்ஹம், யானை, பூதம், விருஷபம், இவைகளுடன் கூடியதாக இருப்பது, தேவர்களுக்கு உரியதாகும்.

இவ்விதமாக, ஸிம்ஹத்துடனும், யானையுடனும் கூடியிருப்பது, பிராம்ஹணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும் கூறப்பட்டதாகும். அதது அந்தந்த பெயரையுடையதாகும்.

உத்தரமானது, அப்ஜம், கபோதத்துடன் இருக்க வேண்டும். லிங்காந்தரிதங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும். (அவைகளின் மத்தியில் லிங்கங்களிருக்க வேண்டும்) அது, நானுவிதமான சித்திரங்களினுலே அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். இது, தேவர்களுக்குக் கூறப்பட்டதாகும். இனி அரசர்களுக்குக்கூறுகிறேன். 13½

உசிதமான விஷயத்தில், உபபீடத்துடன் கூடியதாகவும், பத்மபந்தத்துடன் கூடியதாகவும், கர்ணத்தில் நடு நடுவே, ஸ்தம்பங்கள், ஸிம்ஹங்களுடன் ஆச்சரியகரமாகவும் இருக்கவேண்டும். அதற்கு மேலே, தோரணத்துடன் கூடியதாகவும், விஜிகத்துடன்? கூடியதாகவும், ஸ்வர்ணம், ரத்தினங்களுடன் கூடியதாகவும், அதன் சக்திகேற்றவாறு அங்கங்களுடன் கூடியதாகவுமிருக்கவேண்டும். இதற்கு "ஸிம்ஹாஸனம்," என்று பெயர், என்று, முனிவர்கள் கூறியுள்ளார்கள். 15½

ஸ தத்வ்யாஸம் ஆஸநமேவ பாதௌ த்விகுணதைர்க்யகம்
பாதம் || ௧௬ ||

பஞ்சாங்குலஸமுச்ச்ராயம் தத்ர வாஜநம் ஸோர்த்வ ।
உத்தரம் ஸம்ஸ்தாப்ய தாவத்வ்யாஸம் ததந்தரம் வா(வா)ஸ்து ||

வ்யாஸாயாமே மத்யே பஞ்சாம்ஶேகாம்ஶமாயதம் து மத: ।
விஷ்டரஶ்சோத்தரமாயதம் சோத்தரம் அஷ்டோத்தரஶதம்
(யாசேஷம்) || ௧௭ ||

ஜாத்யுத்தமாயதவ்யாஸ(ஸா)ஸநஶய்யாஸ்த்வயா ததா
சேஷா(:) ।
உக்தாஸ்ஸ்வாயாமா(:)ஸ்வஸ்வாம்ஶமேவ வர்திதா ஸ்ம்ருதா(:) ||

---

ஆஸனப்பலகையானது, இதே அகலமுள்ளதாக இருக்கவேண்டும். அதன் காலானது, இரண்டு 2, பங்கு நீளமுடையதாக இருக்கவேண்டும். ஐந்து 5 அங்குலம் வரையில் உயர்ந்திருக்கவேண்டும். அதற்குமேலே, வாஜனமானது, உயரத்தில் அரை ½பங்கு அளவுடையதாக இருக்கவேண்டும். மற்றொரு பாதியானது உத்தரமாக இருக்கவேண்டும். அதன் மத்தியிலுள்ள காத (பள்ள) மானது, அவ்வளவிருக்கவேண்டும். 17

வியாஸம், ஆயாமம், இவைகளின் மத்தியில், விஷ்டரமானது, ஐந்தில் 5ல், ஒரு 1, அம்சம் நீளமுள்ளதாக இருக்கவேண்டும்.

உத்தரமானது, நூற்றெட்டு 108, ஆயதனம் (ஸ்தானம்) உடையதாக இருக்கவேண்டும். அவ்விதமில்லாமல் ... ... ... ? (இருக்கக்கூடாது.) 18

ஜாத்யுத்தமமான (ஜாதியம்சத்துடன் கூடிய) நீளம், அகலங்களையுடைய, ஆஸனங்கள், படுக்கைகள், விரும்பத்தக்கவைகளாகும்.

ஷட்ஸங்க்யமங்குலம் ஸ்யாத் த்வ்யங்குலவ்ருத்த்யா கராந்தகா ச ।
தஶதா விஸ்தாரத: ப்ரோக்தம் சதுரங்குலவிஸ்த்ருதி

வதந்த்யேகே ॥ ௨௦ ॥

சதுரஶ்ராயதாஶ்ரம் வ்ருத்தம் விஷ்கம்பாதுச்ச்ரிதம் ஸமம் ।
ஷடாம்ஶமஷ்டாம்ஶம் வா ஹரிசரணயுதம் ஸகம்பவாஜநகம் ॥

ததூர்த்வே பத்மதலம் ஸ்யாத் கர்ணிகயாலங்க்ருதம் யதாஶோபம் ।
ஶோபநமிதி விஹிதம் ஸர்வம் தேவதேஷு பூஜிதம் ப்ரோக்தம் ॥

---

கீழே கூறப்பட்ட, உயர நீளங்கள், அததன் அம்சத்துடன் (ஜாதியம்சத்துடன் கூடி) விருத்தியடைந்தவைகளாகவும் (அதல்லாமல்) குறைந்தவைகளாகவும் இருப்பவைகளாம். 19

முதலாவது, (இதன் முதல் அளவானது) ஆறு 6 அங்குலமாகும். அது இரண்டு 2, அங்குலம் வீதம் விருத்தியுடன் கராந்தமான (முழம் வரையில்) அளவுகளையுடையதாகும். இவ்விதமாக பத்து 10 விதமான அளவு கூறப்பட்டிருக்கிறது சிலர், நான்கு4 அங்குலம் விஸ்தாரமிருக்கவேண்டுமென்றும் கூறுகிறார்கள். 20

(ஆஸனமானது) சதுரஶ்ரமாகவோ, நீண்ட சதுரஶ்ரமாகவோ, வட்டவடிவமாகவோ இருப்பதாகும். அது, அகலத்தில் ஸரிபாதியளவு உயரமுள்ளதாக இருக்கவேண்டும். அல்லது, அகலத்தில் ஆறில் 6ல் ஒரு 1 பங்கு எட்டி 8ல் ஒரு 1 பங்கு (உயரமுள்ளதாக) இருக்கவேண்டும். அது, ஸிம்ஹக்காலுடையதாகவும் கம்பம், வாஜனத்துடன் கூடியதாகவுமிருக்கவேண்டும். 21

அதன்மேலே, கர்ணிகையினால் அலங்கரிக்கப்பட்டு சோபிதமாக பத்மதளங்களிருக்கவேண்டும். இதற்கு "சோபனம்" என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது. இவை யாவும், தேவதைகளின் பூஜைக்குக் கூறப்பட்டவைகளாகும். 22

नानाचित्रसमेतं स्यात् सम्पत्करं गृहार्चनपीठमीरितम् ।
न्यग्रोधोदुम्बराश्वत्थपिप्पलबिल्वसारदारुजम् ।
ते सर्वे योग्यमुद्दिष्टाः पीठेष्वेव सर्वसिद्धिकारणम् ॥

अष्टसप्तषोडशत्रयोदशमयवत्स्वंशा
नानाविधि सर्वेऽत्र कल्पनीयाः ।
आयव्ययमृक्षमंशकं वारकेः
यानशयनरथासनानामिदं स्मृतम् ॥ २४ ॥

इति मयमते वस्तुशास्त्रे यानशयनाधिकारो नाम
द्वात्रिंशोऽध्यायः ॥

---

இது, பலவிதமான சித்திரங்களுடன் கூடியதாக இருந்தால், அது வீடுகளில் பூஜை செய்வதற்குக் கூறிய பீடமாகும்.

ந்யக்ரோதம், (ஆல்) அத்தி, வடம் (ஆல்) பிப்பலம், அரசு, பில்வம், ஸாரதாரு, (அழுத்தமான மரம்), ஆகிய மரங்கள் யாவும், இந்த பீடத்திற்குத் தகுதியுள்ளவைகளாம் இவைகள், ஸகலவிதமான ஸித்திகளையுமளிப்பவைகளாம்.

[1] எட்டு 8, ஏழு 7, பதினாறு 16 ... ... ...
... ... ... ... ...

ஆய வியய ருக்ஷியமானது, நக்ஷத்ரம், அம்சம், வாரம், இவைகளினால் கூறப்பட்டிருக்கிறது. இது, யானம், சயனம், ரதம், ஆஸனம், இவைகளுக்குக் கூறப்பட்ட விதியாகும். 24

மயமதம் வஸ்து சாஸ்திரத்தில், யான சயனாதி
காரமென்னும் முப்பத்திரண்டாவது
அத்தியாயம் முற்றும்.

---

1 இங்கு ஆயாதிகள் கூறப்பட்டிருக்கிறது. மூலம் சுத்தமாகவோ போதுமானதாகவோ இல்லை; என்று தோன்றுகிறது.

## 𑌅𑌥 𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌬𑍇𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௧ ॥

𑌮𑍁𑌖𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌾𑌕𑌾𑌰𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍈𑌃 ।
𑌬𑌿𑌮𑍍𑌬𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 𑌶𑌰𑍀𑌰𑌾𑌭𑌾 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌕𑍈𑌃 ॥ ௨ ॥

𑌸𑌨𑍍𑌨𑌦𑍇𑌹𑌪𑍍𑌰𑌤𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌙𑍍𑌗𑍈𑌶𑍍𑌚 𑌨𑌾𑌮𑌭𑌿𑌃 ।
𑌦𑍇𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 (𑌸)𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌤𑌃 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ॥ ௩ ॥

𑌶𑍍𑌵𑍇𑌤𑌾 𑌰𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍀𑌤𑌾 𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌹𑌿𑌤𑌾𑌵𑌹𑌾 ।

---

## முப்பத்திமூன்றுவது அத்தியாயம்.

லிங்கமானது, நிஷ்கலம், ஸகலம், மிச்சிரம், என்று மூன்று 3 விதமாகும்.

நிஷ்கலமானது, லிங்கம், என்று கூறப்படும். (நிஷ்கலம் உருவமில்லாதது). ஸகலமானது, (உருவத்துடன் கூடியது) பேரம், என்று, கூறப்படும். 1

இவ்விரண்டு 2 களுடனும் கூடியது, முகலிங்கம், என்று கூறப்படும்.

ஸகல விதமான மூர்த்தி ஸ்வரூபங்களிலுலேயும், சரீரத்தின் சோபையையுடையது, பிம்பமூர்த்தியாகும். 2

இது, சன்னதேஹமென்றும், பிரதிச்சந்தமென்றும், பிரதிமாங்கமென்றும், பெயர்களுடன் காணப்படுவதும், தேவனென்று கூறப்படுவதுமாகும். இப்பொழுது நிஷ்கலமானது கூறப்படுகிறது. 3

வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு, இந்த நிறங்க

ஸிதவர்ணா ரக்தா பீதா க்ருஷ்ணா ப்ராஹ்மணாதிஷு க்ரமாத் ॥ ௪ ॥

ஸமவர்ணா கநா ஸ்நிக்தா யா பூமௌ நிஹிதா ஸ்திரா ।
ஆயாமவிஸ்தாரயுதா மநோஜ்ஞா யௌவநஸம்ஶ்ரிதா ॥ ௫ ॥

வாதாதபாக்நிஸந்தப்தா ம்ருதுர் யா க்ஷாரஜலோஷிதா ।
துஸ்ஸ்தாநா ஸ்தாநதுஷ்டா ச அந்யகார்யோபயோஜிதா ॥ ௬ ॥

ரேகாபிந்துயுதா க்ருஷ்ணா வ்ருத்தா வக்ரா ச வாலுகா ।
வர்ணதுஷ்டா விஸர்பா ச ஸர்வதா தேவாலயஸ்திதா ॥ ௭ ॥

---

ளுள்ள சிலை (கருங்கல்) கள், முறையே, பிராம்ஹணாதி ஜாதியினருக்கு அனுகூலமானவைகளாம்.

ஒரே விதமான நிறமுடையதும், கனமாக இருப்பதும் கரடுமுரடாக இல்லாமல் இருப்பதும், பூமிக்குள் பதிந்திருப்பதும், (நல்ல) அகலம் நீளமுள்ளதும், மிகவும் மனோஹரமாக இருப்பதும், யௌவனப்பருவமுடையதுமான சிலையானது கிரஹிக்கத்தக்கதாகும்.

காற்று, வெய்யில், நெருப்பு, இவைகளால் பாதிக்கப் பட்டிருப்பதும், மிருதுவாக இருப்பதும், உப்பு நீரில் இருப்பதும், துஸ்ஸ்தானத்திலிருப்பதும், ஸ்தானத்தினுல் பயங்கரமாக இருப்பதும், வேறு காரியத்தில் உபயோகிக்கப் பட்டதும், கோடுகள் விழுந்ததும், புள்ளிகளுள்ளதும், களங்கம் (கருப்பு) விழுந்ததும், கிழப்பருவமுடையதும், கோணலாக இருப்பதும், மணலுடன் கூடியதும், நிறப் பழுதானதும் (விகாரமான நிறமுடையதும்,) விறிசலுடையதும், வீட்டில் அல்லது கோவிலிலிருப்பதும், சத்தமில்லாததும், பொந்து விழுந்ததும், உடைந்ததும், கர்பத்துடன் கூடியதும் (கல்லுக்குள் கல்லுடன் கூடியதும்) ஆன சிலைகள் நிந்திக்கப்பட்டவைகளாகும்,

ஏகவர்ணா க⁴நா ஸ்நிக்³தா⁴ மூலாத³க்³ராவதி⁴ ருஜு: |
க³ஜக⁴ண்டாரவா யா ஸா பும்ஶிலேதி ப்ரகீர்திதா || ௮ ||

ஸ்தூ²லமூலா க்ருஶாக்³ரா யா காம்ஸ்ய(காம்ஸ்ய)தாலவத்³த்⁴வநி: |
ஸ்த்ரீஶிலா க்ருஶமூலாக்³ரா ஸ்தூ²லமத்⁴யா ஷண்டீ² நி:ஸ்வநா || ௯ ||

ஸகலம் நிஷ்கலம் மிஶ்ரம் கல்பயேத் பும்ஶிலயா ஸுதீ⁴: |
பிண்டி³காம் ஸ்த்ரீஶிலா: ஸம்யக் நாரீபேரம் ச விஸ்த்ரீகா(ம்) || ௰ ||

ஷண்டோ²பலேந கர்தவ்யம் ப்³ரஹ்மகூர்மஶிலே ததா² |
நந்த்³யாவர்தஶிலே வாபி கர்தவ்யா தேந ஸாத⁴நா || ௧௧ ||

---

ஒரே நிறமாகவும், கனமாகவும் வழவழப்பாகவும் அல்லது மனோஹரமாகவும், அடிமுதல் நுனிவரையில் நேராக (கோணலில்லாமல்) இருப்பதும், யானையின் மணியைப்போன்ற ஒலியையுடையதுமான சிலையானது, புருஷசிலையாகும். என்று கூறப்பட்டிருக்கிறது.

அடிப்பக்கம் பருமனாகவும், நுனிப்பக்கம் சிறியதாகவும் வெண்கலத்தாளத்தைப் போன்ற சத்தமுடையதாகவுமிருக்கும் சிலையானது ஸ்திரீசிலையாகும்.

அடியும் நுனியும் சிறுத்தும், (நடுவில்) பருத்தும் சத்தமில்லாததுமான சிலையானது, நபும்ஸகசிலையாகும். 9

சிறந்த அறிவாளியாக இருப்பவன், ஸகலம், நிஷ்கலம், மிச்சிரம், இவைகளை புருஷசிலையினால் செய்யவேண்டும்.

ஸ்திரீபேரம் (பிம்பம்) பிண்டிகை இவைகளை ஸ்திரீ சிலையினால் செய்யவேண்டும். 10

பிரம்ஹபீடம், கூர்மசிலை, இவைகளை, நபும்ஸகசிலையினால் செய்யவேண்டும். அதனால் நந்தியாவர்த சிலையைக் கல்பிப்பதுமாகும், ? 11

[illegible] ।
[illegible] ॥ ௧௨ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௩ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௪ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௫ ॥

---

ஸமர்தனுக இருப்பவன். அதனுல், கோவில், அதன் தலம், மதிள், இவைகளைக் கல்பிக்கவேண்டும்.

சிலையானது, பாலை, மத்திமை, விருத்தை, என்று மூன்று விதமாகும். 12

டங்ககாதாதிகளில் மிருதுவானதும், (உளியடியை தாங்காததும்) சிறிது சுடப்பட்ட செங்கல்லைப்போல் (உறுதி இல்லாமல்) இருப்பதுமான சிலையானது, பாலப்பருவ முடைய சிலையாகும். அது எந்தகாரியத்திற்கும் கூடாத தாகும் என்று, அதையறிந்தவர்களினுல், நிந்திக்கப் பட்டிருக்கிறது. 13

ஸ்நிக்தமாகவும் (வழவழப்பாகவும், அல்லது மனோஹர மாகவும்) கம்பீரமான (சிறந்த) சத்தமுடையதும், நறுமண முடையதும், குளிர்சியாக இருப்பதும், மிருதுவாக இருப்பதும் எந்த விடத்திலும் பொர்து விழாததும், நல்ல ஒளியுடையது மான சிலையானது, யௌவனப்பருவமுடையதாகும். 14

இவ்விதம், மத்திமப்பருவமுடைய சிலையானது, ஸகல காரியங்களிலும், காரிய ஸித்தியையளிப்பதாகும்.

மீன், தவளைகளுடன் கூடியதும், அல்லது இவைகளைப் போன்ற சிதல்களையுடையதும், ருக்ஷமானதுமான (கரடு

[illegible] ।
[illegible] ॥ ௧௬ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௭ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௮ ॥

---

முரடானது அல்லது அருவருக்கத்தக்கதுமான) சிலையானது விருத்த (கிழட்டு) சிலையாகும். இது மங்களகரமாகும். 15

அது, கோடுகள், புள்ளிகள், களங்கம் (மச்சம்) இவைகளுடன் கூடியதாக இருந்தால், அத்தகைய சிலையை, மிகுந்த முயற்சியுடன் விலக்கிவிட வேண்டும்.

எந்த சிலையானது, சேதிக்கும் (துண்டிக்கப்படும்) பொழுதும், தக்ஷணம் செய்யும் (செதுக்கும்) பொழுதும், மண்டலாகாரமாகக் காணப்படுகிறதோ, அது, கர்பிணீ சிலையாகும், வித்துவானுக இருப்பவன், அந்த சிலையை ஒதுக்கிவிட வேண்டும்.

சிலையை பூமியிலிருந்து எடுக்கும் பொழுது, அடிப்பக்கமானது, முகபாகம் (முன்பக்கம்) ஆகும். மேலே இருப்பது சிரஸ்ஸு (பின்பக்கம்) ஆகும், என்று கூறுகிறுர்கள். 17

சிலையானது, கிழக்கு மேற்காக இருந்தால், மேற்குப் பக்கம் அதன் அடிப்பக்கமாகும். கிழக்குப்பக்கம், நுணிப் பக்கமாகும். தெற்கு வடக்காக இருந்தால், தென்பக்கம் அதன் அடிப்பக்கமாகும். வடப்பக்கம் நுணிப்பக்கமாகும்.

நுணிப்பக்கமானது அக்கிர (சிரோ) பாகமாகும் அடிப் பக்கமானது மூலம் (கீழ்) பக்கமாகும். இது நிற்கும் சிலைக்குக்கூறப்பட்டதாகும்,

நைர்ருத்யைஶாநதேஶாக்ரா வஹ்ந்யக்ரா வஹ்நிவாயுகா |
உத்தராயணமாஸே து ஶுக்லபக்ஷே ஶுபோதயே || ௧௯ ||

ஶ்லாக்யபக்ஷநக்ஷத்ரே முஹூர்த்தே கரணாந்விதே |
லிங்கம் ஸமுத்திஶ்ய வநம் சோபவநம் கிரிம் || ௨௦ ||

அதவா ஶுத்ததேஶே து பூமிஸ்தஶிலஸம்யுதே |
ப்ராச்யாம் து ஸௌம்யாமைஶாந்யாம் வா விஶேஷத: ||

நிமித்தஶகுநைஶ்ஶுபைஸ்ஸஹ மங்களஶப்தகை: |

---

சிலையானது, நிருருதி ஈசான திக்காக இருந்தால், ஈசான திக்கானது அக்கிரபாகம் (தலைப்பக்கம்) ஆகும். அக்னி-வாயு திக்காக இருந்தால், அக்கினி திக்கானது அக்கிரபாகமாகும். (தலைப்பக்கமாகும்).[1] 18½

உத்தராயண மாஸத்தில், சுக்கில பக்ஷத்தில், சுப கிரஹங்கள் (அஸ்தமனமடையாமல்) உதித்திருக்கக்கூடிய காலத்தில், சிலாக்கியமான பக்ஷத்தில், சிலாக்யமான நக்ஷத்திரத்தில், சுபகரமான முஹூர்த்தத்தில், சுபமான கரணத்தில், லிங்கம் செய்வதை உத்தேசித்து, (சிலையைக் கொண்டு வருவதற்காக), வனம், உபவனம், மலை, இவைகளுக்குச் செல்லவேண்டும். 20

அல்லது, சுத்தமான இடத்தில் பூமிக்குள் புதைந்திருக்கும் சிலையுடன்கூடிய இடத்திற்குச் செல்லவேண்டும்.

கிழக்கு, வடக்கு, அல்லது ஈசான திக்கை நோக்கிச் செல்லவேண்டும். 21

சுபமான நிமித்தம், சுபமான சகுனங்கள், இவைகளுடனும், மங்கள சப்தங்களுடனும் செல்லவேண்டும்.

---

1. கிழக்கு நுனியாகவோ, வடக்கு நுனியாகவோ இருக்கும் சிலையை கிரஹிக்கவேண்டும். என்று காசியபசில்பத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஸ்தாபக: ஸ்தபதி: கர்தா குர்யாத் கௌதுகபந்தனம் || ௨௨ ||

ஸ்தாபக: ஸ்தபதிஶ்சைவ ஸிதவஸ்த்ரோத்தரீயகௌ |
ஶ்வேதகந்தானுலேபௌ ச ஸிதபுஷ்பாதிரீயகௌ || ௨௩ ||

ஸிதபஞ்சாங்கபூஷாட்யௌ ப்ராக்வத்ஸம்பூஜ்ய பூஷணௌ |
கச்சேயு: பாஷாணஸித்த்யர்த்தம் வனம் வாத்யரவேண ச ||

பாயஸான்னாதிமத்ஸ்யைஶ்ச பக்ஷ்யைஶ்சாபி விசித்ரகை: |
கந்தபுஷ்பாதிதூபைஶ்ச ஸம்பூஜ்ய வனதேவதா: || ௨௫ ||

ஶிலாவ்ருக்ஷாதிகம் ஸம்பூஜ்ய பூதேப்யஶ்ச பலிம் ததேத் |
ஸ்தபதிஶ்ச ததோ யோக்யாம் ஶிலாம் ஸம்யக் பரீக்ஷயேத் || ௨௬ ||

---

ஸ்தாபகன், ஸ்தபதி, கர்தா (யஜமானன்) இவர்கள், கௌதுக பந்தனம் செய்துகொள்ளவேண்டும்.

ஸ்தாபகன், ஸ்தபதி, இவர்கள், வெளுப்பான வஸ்திரம் மேலாடைகளை தரித்துக்கொள்ளவேண்டும். வெளுப்பான சந்தனத்தை பூசிக்கொள்ளவேண்டும். வெளுப்பு புஷ்பத்தை சிரஸில் தரித்துக்கொள்ளவேண்டும். பஞ்சாங்க பூஷணங்களை தரித்துக்கொள்ளவேண்டும்.

[இவ்விதமாக குறிப்பிட்ட இடத்திற்குச்சென்று, க்ர்ஹிக்கவேண்டிய சிலைகள், மரங்களை நிச்சயித்துக் கொண்டு] சந்தனம், புஷ்பங்கள், தூபம், மாம்ஸம், ரக்தம், பாயஸான்னம், மத்ஸியம், பலவிதமான பணியாரங்கள், இவைகளினால், விரும்பிய மரங்களையும், சிலைகளையும், பூஜிக்கவேண்டும். வனதேவதைகளையும் பூஜிக்கவேண்டும். பூதகுரூர பலியைக் கொடுக்கவேண்டும். (உக்கிரமான பூதங்களுக்கு பலிகொடுக்கவேண்டும்).

பிறகு, வேலைக்குத் தகுதியுள்ள சிலையை வரிக்க (நிச்சயிக்க) வேண்டும்.

ஸ்தபதியானவன், நன்கு அலங்காரம் செய்துகொண்டு,

அயம் மந்த்ர:—

ஓம், அபக்ராமந்து பூதாநி தேவதாஶ்ச ஸகுஹ்யகா: ।
யாந்த்வஸ்மாத் தா பலிம் க்ருஹீத்வா யாந்து க்ரூராஶ்ச வநதேவதா: ॥ ௨௭ ॥

அத்யைதத் ஸாதயிஷ்யாமி க்ரியதாம் வஸ்தவ்யமந்யத: ।
ஏவமுக்த்வா நமஸ்க்ருத்ய ஶிலா: சேத்தும் ஸமாரபேத் ॥ ௨௮ ॥

தஸ்யைவ ஸ்தாபகோ யுக்த்யா ஜுஹுயாத் ததுதக்திஶி ।
ஹைமஸூச்யஷ்டிலாஸ்த்ராப்யாம் து ஶோதயேத் ப்ரயத்நத: ॥

தீக்ஷ்ணஶஸ்த்ரேண மஹதா யஷ்டிநைவ ப்ரஹாரயேத் ।
உஷ்ட்ராயஸவிஶாலாஸ்த்ராயஸைவம் ப்ராஹயேத் தத: ॥ ௩௦ ॥

---

கிழக்குமுகமாக இருந்துகொண்டு, அடுத்துக் கூறப்படுகின்ற மந்திரத்தை ஜபிக்கவேண்டும். 26

ஓம், ஹே பூதங்களே, தேவதைகளே, குஹ்யகர்களே, குரூரமான வனதேவதைகளே, உங்களுக்கு இந்த பலியைக் கொடுக்கிறேன். நீங்கள் இந்த இடத்தை (சிலையை மரத்தை) விட்டுச் செல்லவேண்டும். நான் இந்தக் காரியத்தைச் செய்யப்போகிறேன், நீங்கள் வேறு இடத்திற்குச் செல்லவேண்டும், என்று (பொருளுடைய இந்த மந்திரத்தை) சொல்லி, நமஸ்காரம் செய்துவிட்டு, சிலையை வெட்டத் துவக்கவேண்டும். 28

ஸ்தாபகர், அந்த இடத்திற்கு வடபக்கத்தில், யுக்தியுடன் ஹோமம் செய்யவேண்டும். அதன் பிறகு, (கல்லை எடுப்பதற்குக் குறிப்பிடப்பட்டிருக்கும்) அந்த இடத்தில், தங்க ஊசியினாலும், அஷ்டிலத்தி (சலாகை, குத்தாலிபோன்ற கருவியி)னாலும், முதலில் சோதித்துப் பார்க்கவேண்டும். 29

மறுபடியும், கூர்மையான பெரிய ஆயுதத்தினாலேயும், [redacted]தினாலேயும், (குத்தாலிபோன்ற ஆயுதத்தினாலே

அதாஶ்ரஸம் க்ருத்வா ஸவஹாமம் விஶேஷ்ய ச ।
ஶாஸிம் க்ருத்வா³ ப்ரக்ஷயித்வா து மஸாவைத்ய நிர்க்ஷயிவ ஸம்வர்த்த ॥

ஸிம்ஹம் வா விண்டிகாம் பேரகௌபமும் வாக்ஷத்ரேவ வா ।
வஸ்த்ரேராவேஷ்டயித்வா து ரயெ ஸம்ஸ்தாப்ய யத்நத: ॥ ௩௨ ॥

ஸாவத்ரம் ஸமுஸம்யுக்தோ நீயாக கர்மமண்டபே ।
அயோக்யவிஹிதா ஸஸ்யக் கல்பயேகுஸிதேந ச ॥ ௩௩ ॥

யயோக்யவிஹிதா நைவ லப்யதே யதி பிண்டிகா ।
ஶ்ரஹீத்வாऽந்யத்ர வர்ஜேயேதோக்யவிஹிதா தஸ்மிந்ஶிலி ॥ ௩௪ ॥

---

யும்) அந்தச் சிலையை, வேண்டிய அகலம் நீளத்திற்கு அதிகநீளமாக இருக்கும்படி, உடைத்து எடுக்கவேண்டும்.

அந்தச் சிலையை, முயற்சியுடன் சதுரசிரத்திற்கு ஸமமாகச் செய்து, முகபாகத்தையும் (முன் பக்கத்தையும்) நிச்சயம் செய்துகொண்டு, அதை சுத்தமாகச் செய்துகொண்டு, விதியுடன், கந்தம் முதலியவைகளினுல் பூஜிக்கவேண்டும். 31

அது, லிங்கம், பிண்டிகை, பேரம், இவைகளுக்கான சிலையாகுலும், விருக்ஷமாகுலும், அதை வஸ்திரங்களினுல் சுத்தி, ஜாக்கிரதையாக, அதை ரதத்தில் வைத்து, ஸகல மங்கள வாத்தியம் முதலியவைகளுடன் எடுத்து வந்து, வேலை செய்வதற்கான மண்டபத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

பிறகு, மறைவான இடத்தில், விதியுடன், (லிங்காதிகளை) கல்பிக்கவேண்டும். 33

கூறப்பட்டிருக்கிற விதியினுலே, பிண்டிகையானது கிடைக்காதுபோனுல், அந்த சிலையை அங்கேயே (எடுத்த

नीत्वा तत्र वसित्वा तु शालिक्षीराम्बुसेचिते ।
प्रक्षाल्य विधिवत् हुत्वा शान्तिं कृत्वा शुभावहां ततः ॥ ३५ ॥

मङ्गलाद्यैश्च वाद्यैस्तु सर्वशब्दप्रघोषणैः ।
आनीयात् कर्मवेश्मन्तु दिशि पूर्वशिलास्थिते ॥ ३६ ॥

लिङ्गमानाद्विमानं वा लिङ्गं वा हर्म्यमानतः ।
समर्थश्च सूत्राद्वामे ईषदर्चालिङ्गमेव वा ॥ ३७ ॥

द्वारायामैकविंशांशं तु कृत्वा विचक्षणः ।
* त्र्यंशे कृते भागे ब्रह्मांशे (शं) मध्यमे स्वके ॥ ३८ ॥

---

இடத்திலேயே) புதைத்து விட்டு, சுபநக்ஷத்திரத்தில், சுப முஹூர்த்தத்தில், அதற்கு வடக்கில் மற்ருெரிடத்தில், வேறு சிலையை முன்பு கூறப்பட்டிருக்கின்ற விதியின்படி கிரஹித்து, விதியுடன் ஹோமம் செய்து, ஜலத்தினால் நன்கு சுத்தம் செய்து, ஸகலவிதமான மங்கள வாத்திய கோஷங்களுடன், அதை எடுத்து வந்து, முன்பு சிலையை வைத்திருந்த இடத்திற்கு கிழக்கில், வேலை செய்யுமிடத்தில் இறக்கிவைக்கவேண்டும். 36

லிங்கமானத்திலிருந்து விமானத்தையோ, ஹர்மிய மானத்திலிருந்து லிங்கத்தையோ கணக்கிட்டுக்கொள்ள வேண்டும்.

ஸமர்த்தனுக இருப்பவன், மத்திய ஸூத்திரத்திற்கு இடது பக்கத்தில், சிறிதளவு சேர்த்துக்கொண்டு, கர்பகிரஹ மத்தியில், அர்சா லிங்கத்தை ஸ்தாபிக்கவேண்டும். 37½

[1] துவாரத்தை இருபத்தோரு 21, பாகங்களாகச்

---

* त्र्यंशे इत्यादिकः सार्धः श्लोकः असम्बद्धप्राय इव भाति ।

1. துவாரத்தை என்பது முதல் 1½ சுலோகங்களில் கூறப்பட்டிருக்கின்ற விஷயமானது, பொருத்தமாக இருப்பதாகத் தோன்றவில்லை.

க்ருத்வா ஷடம்ஶகம் தஸ்மிந் வாமே (அ)த்⁴யம்ஶம் வ்யபோஹ்ய ச ।
தத³ம்ஶம் ப்ராங் நீத்வா து ப்ராகு³த³க்ஸூத்ரகம் ॥ ௩௯ ॥

தத்³ ப்³ரஹ்மஸூத்ரமித்யுக்தம் தத்ஸூத்ரம் ஶிவமத்⁴யமம் ।
க³ர்பா⁴ர்த⁴மத⁴மம் ஶ்ரேஷ்ட²ம் பஞ்சத்ரிம்ஶம் ஶிவாயதம் ॥ ௪௦ ॥

ஸந்தி நவ லிங்கா³நி தயோர்மத்⁴யே(அ)ஷ்டபா⁴ஜிதே ।
ஶ்ரேஷ்ட²மத்⁴யகநிஷ்டா²நி த்ரீணி த்ரீணி பே⁴தா³நி தாநி ஹி ॥ ௪௧ ॥

நாக³ரே நாக³ரஸ்யோக்தம் மாநம் லிங்க³ஸ்ய ஸத³நே ।
விகாராம்ஶே ததா²யாமே ஹஸ்தமம் மாத்ரிகாஸ்ய ॥ ௪௨ ॥

---

செய்தால், அதன் மத்தியிலிருப்பது பிரம்ஹாம்சமாகும். அதை ஆறு 6, பாகங்களாகச் செய்துகொண்டு, இடது பக்கத்தில் இரண்டு 2, பாகத்தை நீக்கவேண்டும். அந்த அம்சத்தை முன்பக்கத்தில் தள்ளி (சேர்த்து) பிராகுதக்காக (கிழக்கு வடக்காக) ஸூத்திரத்தை கல்பிக்கவேண்டும். 39

அதற்கு பிரம்ஹ ஸூத்திரம் என்று பெயர். அந்த பிரம்ஹ ஸூத்திரமானது பரமேசுவரனுடைய (லிங்கத்தினுடைய) மத்திமமாகும்.

.கர்பத்தின் பாதியளவு இருப்பது, அதமமாகும்? லிங்கத்தின் விஸ்தாரமானது, முப்பத்தைந்து 35, (அங்குலமிருந்தால்) உத்தமமாகும். 40

அவ்விரண்டு மானங்களின் மத்தியத்தை எட்டு 8, பாகங்களாகச்செய்ய, அது ஒன்பது 9 பாகமாகும். அவைகளில் மூன்று 3, மூன்று 3, பாகங்கள், முறையே, (அதிகமானத்திலிருந்து) உத்தம-மத்திம-அதம லிங்கங்களாகும். இது நாகர லிங்கத்திற்குக் கூறப்பட்டது. இவ்விதமாக, லிங்க மந்திரத்தில் (கர்பகிரஹத்தில்) நாகர லிங்கத்திற்கு மானம் கூறப்பட்டிருக்கிறது. 41½

ஜயதம் பௌஷ்டிகம் ஸார்வகாமிகம் நாகரே விது: ।
மஹேசி த்ரிஸப்தாம்ஶே து தசாம்ஶம் த்ராவிடேऽதம: ॥ ௪௩ ॥

த்ரயோதஶாம்ஶகம் ஶ்ரேஷ்டம் மஹேஶேஷ்டாம்ஶே து பூர்வவத் ।
த்ரிஸப்தாம்ஶே நிஜாயாமே ஷட்பஞ்சவேதாம்ஶகம் ॥ ௪௪ ॥

ஜயதாதிவிஶாலம் தத்பூர்வவத் த்ராவிடே மதம் ।
வேஶ்மனோ பஞ்சவிம்ஶாம்ஶே மூலமானே விபாஜிதே ॥ ௪௫ ॥

த்ரயோதஶாம்ஶகம் ஹீனம் ஶ்ரேஷ்டம் ஸ்யாத் ஷோடஶாம்ஶகம் ।

---

லிங்கத்தின் நீளத்தை விகாராம்சமாகச் செய்து கொண்டால், அதில், ஐந்து 5, ஏழு 7, அல்லது மூன்று 3, பாகம் விஸ்தாரமுடையது, முறையே, ஜயதம், பௌஷ்டிகம், ஸார்வகாமிகம், என்று பெயருடையதாகும். இது நாகர லிங்கத்திற்குக் கூறப்பட்டதாகும். (விகாரம்— எட்டு 8.) 42½

கர்பகிரஹத்தை (அகலம் அல்லது நீளத்தை) இருபத்தோரு 21, பாகங்களாகச் செய்துகொண்டால், அவைகளில் பத்து 10, பாகமிருப்பது, திராவிட லிங்கத்தில் அதமமானமாகும். பதின்மூன்று 13, அம்சமிருப்பது, உத்தமலிங்கமாகும்.

கர்பத்தை எட்டு பாகங்களாகச் செய்துகொண்டால், முன்பு கூறப்பட்டிருப்பதைபோலவேயாம். 43½

அதன் (லிங்கத்தில்) நீளத்தை இருபத்தோரு 21 அம்சங்களாகச் செய்துகொண்டால், அதில் ஆறு, 6, ஐந்து 5 நான்கு 4, அம்சமிருப்பது, முறையே ஜயதாதிலிங்கங்களின் விசாலமாகும்.

அது, திராவிடலிங்கத்தில், முன்பு கூறப்பட்டிருப்பதை போலிருப்பதுமாகும். 44½

கர்பகிரஹம், விமானம், இவைகளை இருபத்தைந்து 25 பாகங்களாகச் செய்து கொள்ளவேண்டும். அவைகளில்,

தயோரஷ்டாம்சே து நவஸம்மாநி வர்த்திவர்த்தகா || ௪௬ ||

வஸு வஸ்வாம்சகே தைர்க்யே வஸ்வாம்சகே(கழ)।
வெஸ்தாரந்யோத்ஸம் வ்யாஸம் வர்த்திவேகா ஜயதாதிகழ || ௪௭ ||

விகாரபரியள ஹஸ்தவ்யாஸ: ஸவர்த்த க்ரீதித்த: ।
ரஸம்ஹாநம் ப்ரோக்தம் ஹஸ்தாநம் து வக்ஷ்யதே || ௪௮ ||

ஹஸ்தாத்ஷட்கரம் நவஹஸ்தாந்தம் ஷட்ஷம் மாத்ரை: ।
வ்யஸ்தாயதா: த்ரயஸ்த்ரிம்சகா லிங்காநாம் கீர்த்திதா: || ௪௯ ||

---

பதிமூன்று 13 அம்சமிருப்பது, வேஸா லிங்கங்களில் அதம லிங்கமாகும். 16 பாகமுள்ளதாக இருப்பது, (வேஸா) உத்தமலிங்கமாகும். இவ்விரண்டுமானங்களின் மத்திய மானத்தை, எட்டு 8 பாகங்களாகச்செய்தால், (மத்திம) லிங்கமானமானது, முன்பு கூறப்பட்டிருப்பதைப் போல், ஒன்பது 9 விதமாகும். 46

(லிங்கத்தின்) நீளத்தை இருபத்தைந்து 25 பாகங் களாகச் செய்து கொள்ளவேண்டும். அவைகளில் எட்டு 8, ஏழு 7, ஆறு 6 பாகங்கள் விஸ்தாரமுள்ளது, முன்பு கூறப் பட்டிருப்பதைபோல், ஜயதம் முதலியவைகளாகும். 47

விகாரபரிதியின் (பரிதியின் விகாராம்சத்தில்) ஐந்து 5 பங்கு விஸ்தாரமானது, எல்லா லிங்கங்களுக்கும் கூறப்பட்டிருக்கிறது. (விகாரப்—எட்டு 8, பரிதி சுத்தளவு.)

இவ்விதமாக கர்பமானம் கூறப்பட்டிருக்கிறது. இனி ஹஸ்தமானத்தைக் கூறுகிறேன். 48

ஒரு 1 முழம்முதல், ஆறு 6 அங்குலம் வீதமாக, ஒன்பது 9 முழம் வரையில் கூட்டிவர, லிங்கத்தின் நீள (உயர) மானது, முப்பத்தி மூன்று 33 விதமாகும். என்று கூறப்பட்டிருக்கிறது. 49

स्थानान्तविमानाद्याः पञ्चारत्न्यादिवृद्धितः ।
क्रमेणैव त्रयस्त्रिंशत् संख्या मानं विधीयते ॥ ௫௰ ॥

केचित् त्र्यङ्गुलवृद्ध्या तु हस्तैकादिहस्ततः ।
आयादि संपदर्थं च ऊनाधिकाङ्गुलक्रमात् ॥ ௫௧ ॥

उच्छ्रयेऽप्यङ्गुलं वृद्ध्या तत्र दोषो न विद्यते ।
पञ्च पञ्चाङ्गुलं चाष्टौ वृद्ध्या षोडशकाङ्गुलैः ॥

वृद्ध्या लिङ्गायतं श्रेष्ठं प्रत्येकं नवधा भवेत् ।
क्षुद्रमध्योत्तमप्रासादानामुदितं क्रमात् ॥ ௫௩ ॥

---

பன்னிரண்டு 12 தலம் முதலியவைகளுள்ள தான தேவாலயத்தில், விமானம் முதலியவைகள், முறையே, ஐந்து 5 அரத்னிவீதமாகக்கூட்டிவர, அதன் மானமானது, முப்பத்திமூன்று 33 விதமாகும் என்று விதிக்கப் பட்டிருக்கிறது. 50

சிலர், ஒரு 1 முழம் முதல், மூன்று 3 அங்குலம் வீதமாக கூட்டிவரவேண்டுமென்று கூறுகிறுர்கள்.

ஆயாதிஸம்பதர்தமாக (ஆயாதிகளைச்சேர்த்து கணக்கிடும்பொழுது, நன்மையான பலனையடையும் பொருட்டு) ஒவ்வொரு 1 அங்குலம் வீதமாகக்குறைத்துக் கணக்கிட வேண்டும். 51

உயரத்தை ஒவ்வொரு அங்குலமாகக்கூட்டி கணக்கிட வேண்டும். அப்படிச்செய்வது குற்றமல்ல.

அடியிலிருந்து, ஐந்து 5, ஐந்து 5, அங்குலம் வீதமாகவும், எட்டு 8 அங்குலம் வீதமாகவும், பதினுறு 16 அங்குலம் வீதமாகவும் கூட்டிவர வேண்டும். 52

லிங்கத்தின் உயரமானது, விருத்தியடைவதால் சிறந்ததாகும். அது, ஒவ்வொன்றும் ஒன்பது விதமாகும்.

இவ்விதமாக, க்ஷுத்திர-மத்திம-உத்தம ஆலயங்களுக்கு (லிங்கமானது) முறையே கூறப்பட்டிருக்கிறது.

𑌦𑍍𑌵𑌾𑌰𑍋𑌦𑌯𑌸𑌮𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑍋𑌨𑌂 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑍇 𑌨𑌵𑌾𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌸𑌪𑍍𑌤𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌕𑍋𑌽𑌧𑌮𑌮𑍍 ॥ ௫௪ ॥

* 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑍇 𑌨𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌦𑌯𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ।
𑌨𑌾𑌗𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑍌𑌧𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌸𑌵𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௫௫ ॥

𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌶𑌿𑌖𑌰𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌸𑍍𑌤𑍂𑌪𑍍𑌯𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑌾𑌨𑌤𑌃 ।
𑌕𑍇𑌚𑌿𑌦𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃 𑌕𑍁𑌮𑍍𑌭𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌦𑌯𑍋 𑌵𑌰𑌾𑌃 ॥ ௫௬ ॥

𑌗𑍍𑌰𑍀𑌵𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌰𑍍𑌵𑌿𑌭𑌾𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌹𑌾𑌨𑍍𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ॥ ௫௭ ॥

---

(லிங்கமானம்) துவாரோதயத்திற்கு ஸமமாக இருப்பது ஶ்ரேஷ்டமாகும். அதில் மூன்றில் ஒரு 1 பாகம் குறைவாக இருப்பது, அதமமாகும்.

ஸ்தம்பத்தின் உயரத்தை ஒன்பது 9, பாகங்களாகச் செய்தால், அவைகளில் ஏழு 7 அம்சம், ஐந்து 5 அம்ச மிருப்பது, (மத்திமமும் அதமமுமாகும்.) 54

அவைகளின் மத்தியபாகத்தை எட்டு 8 பாகங்களாகச் செய்ய, லிங்கோதயமானது, ஒன்பது 9 விதமாகுமென்று கூறப்பட்டிருக்கிறது.

நாகராதி ஸௌதங்களில், விஸ்தாரமானது, முன்பு கூறப்பட்டிருப்பதைபோலவேயாகும். 55

அகஸ்தியர் முதலான சிலபெரியோர்கள், பிராஸாதம், சிகரம், கிரீவை, ஸ்தூபி இவைகளை, அதிஷ்டானத்தின் மானத்தினால், (மானத்தைக்கொண்டு) கல்பிக்கவேண்டு மென்று கூறுகிறார்கள். 56

ஸமர்த்தனாக இருப்பவன், கிரீவோத்ஸேதத்தின் மானத்தை, மானாங்குலத்தினாலே வகுக்கவேண்டும். அது முழு எண்ணாக இல்லாவிட்டால், அத்துடன் கூட்டியோ குறைத்தோ, அதை முழு எண்ணாகச்செய்து கொள்ள வேண்டும். 57

---

* 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇, 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 𑌶𑍋𑌧𑌨𑍀𑌯𑍋 𑌭𑌾𑌤𑌿 ।

உச்ச்ரயேऽஷ்டகுணே (ணே) ஸப்தவிம்சதிஹ்ருதாவசேஷத:
(க்ருதே) ।
சேஷமச்விந்யாதிகம் து நக்ஷத்ரம் து பவத்யஹோ ॥ ௫அ ॥

தத்விஹ்ருதே நவபி: சேஷம் தஸ்கராதிகம் ।
* புக்தி: சக்திர்தனம் ராஜா ஷண்டச்சாபயகம் விபத் ॥ ௫௯ ॥

ஸம்ருத்திரிதி வித்யாத் ததம்சகானி நவ க்ரமாத் ।
தஸ்கரம் ச விபத் ஷண்டம் நிந்திதம் வாஸ்துவேதிபி: ॥ ௬0 ॥

உக்தம் மய(ம்)மதே [illegible] ।

உயரத்தை எட்டிஞு 8ல் பெருக்கி இருபத்தேழிஞு 27ல் வகுத்தால், மீதமானது, அசுவினி முதலிய நக்ஷத்திரமாகும்

அதை ஒன்பதால் 9ல், வகுக்க மீதமானது, தஸ்கராதி அம்சமாகும்.

*புக்தி 1, சக்தி 2, தனம் 3, ராஜா 4, ஷண்டம் 5, (அலி) அபயம் 6, விபத்து 7, ஸமிருத்தி 8, (9?) என்பவைகள் முறையே ஒன்பது 9 அம்சங்களாகும். 59½

தஸ்கரன், விபத்து, ஷண்டம், இவைகள் கூடாதவைகளென்று, வாஸ்து வித்தையையறிந்தவர்கள் கூறுகின்றனர். 60

---

* தஸ்கரோ புக்திசக்தீ ச தனம் (தான்யம்) ராஜா ச ஷண்டக: ।
அபயம் ச ருணம் சைவ, இதி காச்யபசில்பகே ।

நிர்பயச்சாதன: ப்ரேஷ்ய:, இதி ஸாரஸ்வதீய பாட: ।
[illegible] தஸ்கரவசம் யோஜநீயம் ।

*தஸ்கரன் 1, புக்தி 2, சக்தி 3, வனம் 4, ராஜா 5, ஷண்டம் 6, அபயம் 7, தனம் 8, ருணம் 9, என்பது காசிய சில்பபாடம்.

7, 8, 9ல், நிர்பயம், அதனம், பிரேஷியன், என்பதுஸாரஸ்வதீய சித்திரகர்மத்தின் பாடம்.

ஶிஷ்டம் யத்ருணம் சைவ யோநிகம் ஸ்யாத்வ்யயாந்தரே ||௬௧||

த⁴நாதி⁴கம்ருணக்ஷீணம் மாநம் தத் ஸம்பதா³ம் பத³ம் ।
யோநிஷு த்⁴வஜஸிம்ஹௌ ச வ்ருஷோ ஹஸ்தீ ஶுபா⁴வஹா: ||௬௨||

தை³ர்க்⁴யம் நவகு³ணம் க்ருத்வா ஸப்தபி⁴: க்ஷபயேத் தத: ।
ஶேஷம் ஸூர்யாதி³வாரம் ஸ்யாத் க்ரூரவாராஸ்து விவர்ஜிதா: ||

க்³ராமாதீ³நாம் ச கர்துஶ்ச நக்ஷத்ரேணாவிரோதி⁴ யத் ।
தல்லிங்க³ம் தே³ஶதே³ஶேஶதே³ஹிநாம் ஶுப⁴காரணம் ||௬௪||

இஷ்டாயாமவிஶாலேந சதுரஶ்ரீக்ருதம் ஸமம் ।
ஸாகாரமேவம் தத்³பி³ம்ப³ம் சே²த³நீயம் யதோ²சிதம் ||௬௫||

---

தனம் அதிகமாகவும், ருணம் குறைவாகவுமிருக்கும் மானமானது ஸம்பத்துக்களை யளிப்பதாகும்.

யோனிகளில், துவஜம், ஸிம்ஹம், விருஷம், கஜம், இவைகள், சுபத்தையளிப்பவைகளாம். 62

உயரத்தை ஒன்பதா 9ல் பெருக்கி, ஏழா 7ல் வகுத்து வரும் மீதமானது, பானுவாரம் முதலிய வாரங்களாகும், அவைகளில், குரூரகிரஹவாரங்கள் விலக்கவேண்டியவைகளாகும். 63

கிராமாதிகளுடையவும், யஜமானனுடையவும் நக்ஷத்திரத்துடன் விரோதமில்லாத லிங்கமானமானது, தேசம், அந்த தேசத்தின் அரசன், பிரஜைகள், எல்லோருக்கும் சுபகரமாகும்.

விரும்பிய ஆயாமவிஸ்தாரத்தினலே ஸமமாக இருப்பது ஸமசதுர்ச்ரமாகச் செய்யப்பட்டதாகும்.

அந்த பிம்பமானது, உருவமுடையதாக இருந்தாலும், உசிதம்போல் (அளவுடன்) சேதிக்கப்படவேண்டும். 65

ஸாஷ்டாஷ்டாஶ்ரகம் ஷோடஶாஶ்ரம் நாம்நா விகல்பகம் ।
வ்ருத்தமாபாஸகம் லிங்கம் ஸம்ஶோ(ஶா)த்யம் ஸ்யாத் த்ரயாத்மகம் ॥ ௬௬ ॥

த்ரிதா க்ருத்வாயதம் தஸ்ய ப்ரஹ்மாம்ஶம் சதுரஶ்ரகம் ।
அஷ்டாஶ்ரம் வைஷ்ணவம் மத்யே வ்ருத்தமூர்த்வம் ஶிவாம்ஶகம் ॥ ௬௭ ॥

இஷ்டவிஷ்கம்பஹாரேண சதுரஶ்ரீக்ருதம் ஸமம் ।
கர்ணார்தாயதக்ஷேத்ரம் (தே தா) கர்ணாக்ர்யாதிஷ்டாஷ்டாஶ்ரகம் க்ருதம் ॥

அஷ்டவ்யம்ஶகயோர்மத்யம் மத்யபட்டமிதி ஸ்ம்ருதம் ।

---

அஷ்டாஶ்ரமாக இருப்பதற்கு " சந்தம் " என்று பெயர். ஷோடசாஶ்ரமாக இருப்பதற்கு " விகல்பகம் " என்று பெயர். விருத்தமாக இருப்பதற்கு " ஆபாஸகலிங்கம் " என்று பெயர். இந்த மூன்று 3 விதமான லிங்கமும் சே(சோ)திக்கப் படவேண்டும்.

லிங்கத்தின் உயரத்தை மூன்று 3 பாகங்களாகச்செய்து கொள்ளவேண்டும். அவைகளில் அடியிலிருப்பது பிரம்ஹாம்சமாகும். அது சதுரஸ்ரமாக இருக்கவேண்டும்.

அதன் மத்தியபாகமானது, அஷ்டச்ரமாக இருக்க வேண்டும், அது, வைஷ்ணவாம்சமாகும்.

மேலே இருக்கும் பாகமானது, சிவாம்சமாகும். இது வட்டவடிவமாக இருக்கவேண்டும். 67

இஷ்டமானகுறுக்களவுடன் சதுரஸ்ரமாகச் செய்யப்பட்டதானது, இரண்டு 2, கர்ணங்களில் மத்தியபாகத்தை ஸமமாகச் செய்து, அதன் மத்தியில் மற்றொரு கர்ணத்தை கல்பித்திருந்தால், அது, அஷ்டாச்ரமாக (கர்ணம்-மூலை, கோணம்.) செய்யப்பட்டதாகும். 68

நான்கு 4 அம்சம், மூன்று 3 அம்சங்களின் மத்தியமானது, மத்தியபட்டமாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

வ்யாஸே பட்டாம்ஶகே த்ர்யம்ஶே மத்யபட்டம் த்ரிதோதிதம் || ௬௯ ||

கோணாந்தாத் பட்டஸூத்ராந்தே திர்யக் ஸம்லக்நஸூத்ரகம் |
பட்டஸ்யைகாம்ஶிதம் யத்து ஷோடஶாஶ்ரம் ததுச்யதே || ௭௦ ||

ஏவமஶ்ராந்தரே தீமாந் யோஜயேத்து விசக்ஷண: |
கோடிச்சேதே க்ருதே வ்ருத்தம் வ்யாஸ நிம்நோந்நதம் விநா || ௭௧ ||

ஆத்யம் து ஸர்வதோபத்ரம் த்விதீயம் வர்த்தமாநகம் |
ஶிவாதிகம் த்ருதீயம் ஸ்யாத் சதுர்த்தம் ஸ்வஸ்திகம் பவேத் || ௭௨ ||

---

மூன்று 3 அம்சத்துடன் கூடிய பட்டத்தின் அகலத்தில், மத்திய பட்டமானது, மூன்றுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. 69

கோணந்தத்திலிருந்து, பட்டஸூத்திரத்தின் அடையாளத்தில், (ஒரு 1 கோணத்திலிருந்து மற்றொரு கோணம் வரையிலுள்ள பட்டஸூத்திரத்தில்) குறுக்கே சேருகின்ற ஸூத்திரமானது, பட்டத்தின் ஸரிபாதியிலிருப்பதாகும். அது, ஷோடசாச்ரமாகும், என்று கூறப்படுகிறது (அஷ்டாச்ரமத்தியில் ஒரு 1 கோணத்தைக் கல்பித்தால் அது, ஷோடசாச்ரமாகும் என்பது பொருள்.) 70

புத்திமானாகவும், ஸாமர்த்தியசாலியாகவுமிருப்பவன், இவ்விதமாகவே, அச்ரமத்தியில், (அதிகமான அச்ரங்களை) சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இவைகளில் கோடிச்சேதம் செய்தால், முனைகளைத் துண்டித்துவிட்டால், அது வட்டவடிவமாகும்.

அந்த வட்டவடிவத்தில் மேடு, பள்ளங்கள் இருக்கக் கூடாது. 71

முதலாவது "ஸர்வதோபத்திர" லிங்கமாகும். இரண்டாவது, "வர்தமான" லிங்கமாகும். மூன்றாவது, "சிவாதிக" லிங்கமாகும், நான்காவது, "ஸ்வஸ்திக" லிங்கமாகும், 72

அத ப்ராஹ்மணாநாம் ஸர்வதோபத்ரமிஷ்டம்
ஸாம்ராஜ்யவ்ருத்திதம் ந்ருபாணாம் வர்த்தமாநம் ।
தநதமிஹ ஶிவாங்கம் வைஶ்யாநாம் ததா
ஸர்வேஷாம் ஸ்வஸ்திகம் தச்சுபதம் ॥ ௭௩ ॥

த்ரிம்ஶத்பாகே ஸர்வதோபத்ரலிங்கே
மூலே மத்யேऽக்ரே தஶாம்ஶம் க்ரமேண ।
வ்ருத்தம் தஸ்ய ஸர்வத: ஶம்புபாகம்
விப்ராணாம் தத் க்ஷத்ரியாணாம் ப்ரஶஸ்தம் ॥ ௭௪ ॥

வேதாஷ்டாஶ்ரம் ஸ்வரூபமேகைகபாகம்
ஷட்ஷோடஶாம்ஶம் ஷண்ணவதிபாகம் ।
[illegible]
ஸர்வத்ராஷ்டாஶ்ரமேகை: பாத: ॥ ௭௫ ॥

---

பிராம்ஹணர்களுக்கு, ஸர்வதோபத்திரலிங்கமானது, இஷ்டமாகும்.

வர்தமான லிங்கமானது, அரசர்களுக்கு ஸுகத்தையும் அபிவிருத்தியையுமளிப்பதாகும்.

சிவாதிக லிங்கமானது, வைசியர்களுக்கு தனத்தை யளிப்பதாகும்.

ஸ்வஸ்திகலிங்கமானது, மற்றவர்களுக்கும் நான்கு 4 ஜாதியினருக்கும், சுபங்களையளிக்கக்கூடியதாகும். 73

முப்பது 30 பாகங்களுடன் கூடிய "ஸர்வதோபத்திர" லிங்கத்தில், மூலம், மத்தியம், அக்கிரம், இவைகளில், முறையே, பத்து 10, பாகங்களிருக்கவேண்டும்.

சம்புபாகம் முழுமையும், ஸமானமானமுள்ள வட்ட வடிவமாக இருக்கவேண்டும்.

அது, பிராம்ஹணர்களுக்கும், அரசர்களுக்கும் சிறந்தாகும், 74

வர்த்தமானமிதம் அத்யாத்யம்
ப்ரஹ்மவிஷ்ணுசிவாம்சத: க்ரமாத் ।
வேதபாணரஸாம்சம் ச பூர்வம்
வர்த்தமானமிதம் ஶ்ரேஷ்டம் ॥ ௭௬ ॥

ஸப்த ஸப்தவஸுபாகமதிதேனாத:
பஞ்சபஞ்சரஸபாகமத்ர வை ।
வேதவேதஶராம்சமதேனாத:
த்ரயதரயயுகபாகமதோ வா ॥ ௭௭ ॥

உக்தமேதத் சிவாதிகம் அத்யாத்யம்
தத் சிவாதிகலிங்கமீரிதம் ।
ஸர்வஸம்பத்கரம் விசேஷதஃ
ஸர்வவர்ணஹிதமீரிதம் ॥ ௭௮ ॥

---

வர்தமான லிங்கமானது, பிரம்ஹாம்சம், விஷ்ணு அம்சம், சிவாம்சங்களில், முறையே, நான்கு 4 பாகம், ஐந்து 5 பாகம், ஆறு 6 பாகங்களுடனிருப்பது, ஐந்து 5, பாகம், ஆறு 6, பாகம், ஏழு 7 பாகங்களுடையதாக இருப்பது, ஆறு 6 பாகம், ஏழு 7 பாகம், எட்டு 8 பாகங்களுடையதாக இருப்பது, ஏழு 7 பாகம், எட்டு 8 பாகம் ஒன்பது 9 பாகங்களுடையதாக இருப்பது, என்று நான்கு விதமாகும். இவைகள் க்ஷத்திரியர்களுக்குச் சிறந்ததாகும். ஸகலவிதமான ஸம்பத்துக்களையுமளிக்கும், ஜயத்தை யளிக்கும், புத்திரவிருத்தியையளிப்பதாகும். 76

சிவாதிகலிங்கமானது, பிரம்ஹ-விஷ்ணு, சிவாம்சங்களில், முறையே, ஏழு 7, ஏழு 7, எட்டு 8 பாகங்களுடையதாகவும், ஐந்து 5, ஐந்து 5, ஆறு 6, பாகங்களுடையதாகவும், நான்கு 4, நான்கு 4, ஐந்து 5, பாகங்களுடையதாகவும், மூன்று 3, மூன்று 3, நான்கு 4, பாகங்களுடையதாகவும், நான்கு 4 விதமாகும். இது, விசேஷமாக ஸகல

उत्तायामे स्वस्तिके नवांशे
द्वौ च ब्रह्मांशं मध्यमे त्र्यंशकम् ।
वेदांशा मे शाङ्करांशं शूद्रेण
ग्राह्यं सर्वत्र सर्वकामप्रदं तथा ॥ ௭௯ ॥

इति लिङ्गप्रमाणं समाप्तम् ॥

---

अथ लिङ्गलक्षणम् ॥

लिङ्गं सामान्यार्चितं धारालिङ्गं सहस्रलिङ्गकम् ।
त्रैराशिकं तु सर्वेषां सर्वकामफलप्रदम् ॥ ௮0 ॥

---

வஸ்துக்களையுமளிப்பதாகும். *இது ஸகல ஜாதியினருக்கும், துறவிகளுக்கும் சிறந்ததாகும், என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸ்வஸ்திகலிங்கத்தில், அதன் உயரத்தை ஒன்பது 9, பாகங்களாகச் செய்துகொண்டு, அடியில் (பிரம்ஹாம்சத்தில்) இரண்டு 2 பாகம், மத்தியில் (விஷ்ணு அம்சத்தில்) மூன்று 3 பாகம், சிவாம்சத்தில் நான்கு 4 பாகங்கள் இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இது சூத்திரர்களுக்கு, விருப்பமான எல்லாவற்றையுமளிப்பதாகும். 79

லிங்கப்பிரமாணம் முற்றும்.

---

## லிங்கலக்ஷணம்.

லிங்கமானது, தேவார்சிதலிங்கம், தாராலிங்கம், ஸஹஸ்ரலிங்கம், த்ரைராசிகலிங்கம், என்பவைகளாகும். இவைகளில்; த்ரைராசிகலிங்கமானது, எல்லோருக்கும், ஸகலவிதமான பலன்களையும் கொடுக்கக்கூடியதாகும்.

---

*வைசியர்களுக்கும், என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

उक्तायामसमोपेतं स्यादायामार्धपादविस्तृतम् ।
शेषं पूर्ववदुद्दिष्टं नाम्ना सुरगणार्चितम् ॥ ८१ ॥

धारालिङ्गं सर्वलिङ्गे [illegible]
* तलाश्रं वा षोडशाश्रं युगाश्रम् ।
तस्याधस्तु षोडशाश्रं (अष्टाश्रं) सधारं
धारालिङ्गं सर्ववर्णे प्रशस्तम् ॥ ८२ ॥

[illegible] सर्वतोभद्रलिङ्गे
धारालिङ्गं पञ्चपञ्चक्रमेण ।
शतैकैकसंख्याष्टकं पूर्वसिद्धं
साहस्रं तदैवं भवेल्लिङ्गमुक्तम् ॥ ८३ ॥

---

குறிப்பிட்ட நீளம் (உயரம்) உள்ளதாகவும், அதன் நீளத்தில் பாதி, அல்லது கால்பங்கு விஸ்தாரமுள்ளதாகவுமிருக்கவேண்டும். மீதம், முன்பு கூறப்பட்டிருப்பதைபோலவே இருக்கவேண்டும். இது ஸுரகணார்ச்சித (தேவர்களால் பூஜிக்கப்பட்ட) லிங்கமாகும். 81

தாராலிங்கமானது, எல்லாவிதமான லிங்கங்களிலுமிருப்பதாகும். [1] தலாச்ரமாகவோ, ஷோடசா 16 ச்ரமாகவோ, சதுர 4ச்ரமாகவோ இருக்கவேண்டும். அல்லது அடியிலுள்ள அச்ரமானது, ஷோடசாச்ரமாகவோ, அஷ்டாச்ரமாகவோ இருக்கவேண்டும். அது, அதற்கு மேலே, இரண்டு 2 மடங்கு தாரைகளுள்ளதாக இருக்கவேண்டும். இத்தகைய தாராலிங்கமானது, ஸகல ஜாதியினருக்கும் சிறந்ததாகும். 82

[2] அது, ஸர்வதோபத்திர லிங்கமாக இருந்தால், அதன் சிவாம்சத்தில், ஐந்து 5, ஐந்து 5, தாராலிங்கம் இருக்க

---

* तलाश्रं इत्यत्र अष्टाश्रं इति पाठो युक्त इति भाति ।

1 அஷ்டாச்ரமாகவோ, என்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

2 இங்கு கூறப்பட்டிருக்கின்ற கணக்கானது ஸஹஸ்ர 1000 தாரைகள் வருவதற்கு ஏற்றதாக இல்லை.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]

‡ [illegible]

---

வேண்டும். அதற்குமேலே, ஒவ்வொன்றிலும் எட்டு 8, (தாரைகள்) இருக்கவேண்டும். இவ்விதமாக ஆயிரம் தாரைகளுடன் கூடியது, ஸஹஸ்ரதாரா லிங்கமாகும், என்று கூறப்பட்டிருக்கிறது. 83

லிங்கமானது, விருத்தமாகவோ, அஷ்டாச்ரமாகவோ இருந்தால், அதன் பரிதியானது (சுத்தளவானது,) பிரம்ஹ-விஷ்ணு-சிவாம்சங்களில், முறையே, ஆறு 6 பாகம், ஏழு 7 பாகம், எட்டு 8, பாகங்களுடையதாக இருக்கவேண்டும்.

அதன் உயரத்தை ஒன்பது 9 பாகங்களாகச் செய்து கொண்டால், பிரம்ஹாம்சம் மூன்று 3 பாகம், விஷ்ணு அம்சம் மூன்று 3 பாகம், சிவாம்சம் மூன்று 3 பாகமிருக்க வேண்டும். இதுவே த்ரைராசிக லிங்கமாகும். 84

ஆர்ஷலிங்கமானது, ஸ்தூலமூல (அடிபருத்த) லிங்கம் க்ஷீயமத்திய (சிறுத்த மத்தியபாகத்தையுடைய) லிங்கம், பிபீலிகாமத்திய (எரும்புபோல் மத்தியில் மிகவும் சிறுத்த) லிங்கம், சிரஸ்தூல (தலைபெருத்த) லிங்கம், என்று நான்கு 4 விதமாகும். 85

லிங்கத்தின் அடி, மத்தியம், நுணி, இவைகள், அதன்

---

‡ [illegible]
[illegible]

விஷ்ணுப்³ரஹ்மாம்ஶௌ ஸம்யக் சதுரஶ்ரம் ஆர்ஷலிங்கே ஶுப⁴ம் ||௮௬||

ஶிலம் ஸமகாகாரம் த்³வ்யஶ்ரம் பஞ்சாஶ்ரகம் த்ரிகோணம் ச |
ஏகாத³ஶ நவஷட் ஸப்தாஶ்ரம் ச த்³வாத³ஶாஶ்ரம் ச || ௮௭ ||

ஸம்ஸ்தா²னஹீனதராஶ்ரம் ப²லம் ஶிரோ மானஹீனம் ச |
ஊர்த்⁴வநிம்னம் ஸம்ஶீர்ணம் ஸம்ப்ராப்தம் விஷமம் ததா² ||

நிம்னோன்னதஸமாஶ்ரகம் § வைவர்ண்யயுதம் ச ஸம்ஶா-
நிம்னோன்னதம் ததா² |
வக்ரம் வக்ரயுதம் ஸாண்டகஞ்சகளங்கயுதம் ததா² || ௮௮ ||

ஜ்ஞேயம் வை தாத்³ருஶம் லிங்கம் வர்ஜ்யம் ஸ்யான்மதி |

---

விஸ்தாரத்தில் முறையே, எட்டில் ஒரு 1 பாகம் குறைவாக இருக்கவேண்டும். (நுணியைக்காட்டிலும் மத்தியம் ஒரு 1 பாகம் குறைவாகவும், மத்தியத்தைக்காட்டிலும் அடி ஒரு 1 பாகம் குறைவாகவுமிருக்கவேண்டும்.) விஷ்ணுபாகம், பிரம்ஹபாகங்கள், நன்கு சதுரச்ரமாக இருக்கவேண்டும். இது ஆர்ஷலிங்கத்திற்குக்கூறப்பட்டதாகும். 86

லிங்கமானது, பலகையைப்போல் பட்டையாக இருந்தாலும், துவியச்ரம், பஞ்சாச்ரம், திரிகோணம், ஏகாதசா 11ச்ரம், நவா 9ச்ரம், ஷட் 6 அச்ரம், ஸப்த 7, அச்ரம், துவாதச 12 அச்ரம் (பட்டை) உள்ளவைகளாக இருந்தாலும், வேறுவிதமாக இருந்தாலும், சிரஸ்ஸூத்திரமில்லாமலிருந்தாலும், மானம் (அளவு) இல்லாமலிருந்தாலும் மேடுபள்ளமுள்ளதாக இருந்தாலும், சிதைந்திருந்தாலும், நிறப்பழுதாக இருந்தாலும, பூஜாபாகமானது (சிவபாகமானது) மேடுபள்ளமாக இருந்தாலும், கோணலாகவோ செங்குத்தாகவோ இருந்தாலும, மணல், கோடு, களங்கம், (மச்சம்) புள்ளிகள், இவைகளுடையதாக இருந்தாலும்

---

§ விவர்ணகம் நிம்னோன்னதம் வாய | உதி வாமொ யுக்த: |

𑌕𑍋𑌟𑍍𑌯𑍇𑌕𑍈𑌵 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌏𑌷𑌾𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌾𑌯𑌮𑍍𑌭𑍁𑌵 𑌉𑌦𑌿𑌤𑌾𑌃 ॥ ௮௯ ॥

𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌪𑌿 𑌮𑍋𑌹𑌾𑌦𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍𑌭𑍂 𑌮𑍂𑌲𑌚𑍈𑌵 𑌦𑍋𑌷𑌕𑍃𑌤𑍍 ।
𑌆𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌮𑌧𑍋(𑌯𑍋) 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌪𑍂𑌜𑌾𑌭𑌾𑌗𑌂 𑌤𑍁 𑌪𑍀𑌠𑌸𑌮𑌮𑍍 ॥

𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌵𑌾𑌥 𑌸𑌧𑌾𑌰𑌂 𑌪𑍂𑌜𑌾𑌭𑌾𑌗𑌂 𑌤𑍁 𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑌂 𑌯𑌤𑍀𑌨𑌾𑌮𑍍 ।

𑌇𑌤𑌿 𑌲𑌿𑌙𑍍𑌗𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌮𑍍 ॥

𑌅𑌥 𑌶𑌿𑌰𑍋𑌵𑌰𑍍𑌤𑌨𑌮𑌾𑌨𑌮𑍍 ॥

𑌶𑌿𑌰𑍋𑌵𑌰𑍍𑌤𑌨𑌯𑍋𑌗𑍍𑌯𑌾 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌤𑍇 𑌕𑍍𑌰𑌮𑌶𑌃 ॥ ௯௨ ॥

𑌛𑌤𑍍𑌰𑌾𑌹𑌾𑌤𑍍𑌰 𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌷𑌟𑍍𑌕𑌪𑌿𑌕𑌾𑌙𑍍𑌗𑌾𑌯𑌤𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌶𑌾𑌯𑌾𑌃 ।

---

ஒரு 1 கோடுடையதாக இருந்தாலும் இவை ஸ்வாயம்புவ லிங்கங்களாகும். என்று கூறப்பட்டிருக்கிறது.

புத்திமானுக இருப்பவன் இந்த லிங்கங்களின் மூல காரணத்தை சோதிக்கக்கூடாது. 90

அஞ்ஜானத்தினுலேயோ, மோஹத்தினுலேயோ, மூலத்தைசோதிப்பது குற்றமாகும்.

லிங்கத்திற்குக் கீழே ஆஸ்தாபனம் (பீடம்) இருக்க வேண்டும். பூஜாபாகமானது (சிவபாகமானது) பீடத்திற்கு ஸமமாக (பொருத்தமாக) இருக்கவேண்டும். 91

(பீடமானது) வட்டவடிவமாகவோ, (ஜல) தாரையுள்ளதாகவோ இருப்பதாகும். இதன் பூஜாபாகமானது, யமிகளுக்கு, (முனிவர்களுக்கு) மோக்ஷத்தை யளிப்பதாகும்.

சிவலிங்க லக்ஷணம் முற்றும்.

## சிரோ வர்த்தனமானம்

இப்பொழுது, லிங்கங்களின் சிரோவர்த்தனத்தை க்ரமமாகக் கூறுகிறேன்.

புத்புதாபம் பஞ்சதா ப்ரோக்தம் வதந்தி முநிஸத்தமா: ||

விஸ்தாரே ஷோடஶாம்ஶே து ஏகம் த்வ்யம்ஶம் த்ர்யம்ஶம் சதுரம்ஶகம் |
லிங்கஸ்யாதோ ஹஸ்தமார்க்கம் பார்ஶ்வயோ: க்ரமஶ: ||

சத்ராகாரம் ஶிரோவர்தம் சதுர்விதம் விதீயதா |
ஸமலிங்கே த்வயம் சோக்தம் ஶைவாதிகலிங்ககே த்ருதீயம் ஸ்ம்ருதம் ||

சதுரம்ஶோக்தம் யதுக்தம் தத் வ்ருத்தகம் வர்தமானகஸ்ய |
ஸங்கரம் சேத் ஶிரோவர்தம் ஸர்வஸம்பந்நாஶனம் ஸ்யாதநர்தாய ச || ௯௬ ||

---

